REGISTERED No. M. 6165. அணா 2

860
4-54

860

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

OFFICE ... 3 DEC 1954 ... MADRAS

டிசம்பர் 1954.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| மனித கௌரவம் காப்பது இஸ்லாமே ... | 1 |
| திருக் குர்ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) ... ... ... ... | 7 |
| ஹாத்திம் தாயீ வாழ்க்கை வரலாறு டி. எப். ஆர். மஆலி சாஹிபு (பாகவி) ... | 11 |
| இரத்தச் சின்னம் (தொடர் கதை) ... ... | 19 |
| முல்லா தோ பியாஸாவும், அக்பர் பாதுஷாவும் ...ர் பகுதி) ... ... ... ... | 24 |
| ...த்தீன் ஔலியா ஜீவிய சரித்திரம் ...பட்டை S. அப்துல் ரஜாக் சாஹிப்) | 27 |


...இஸ்லாம் ஆபீஸ் :
...ஃ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

3L
ஓ௩௨1, M79FI
N54
187037

# பத்ஹுல் இஸ்லாம்

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

பத்ஹுல் இஸ்லாம்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.


## ஸூறத்து யாஸீனும், துஆவும்

யாஸீன் ஸூராவுடைய அரபு ஆயத்துகளைத் தமிழ் எழுத்தைக் கொண்டு திருத்தமாய் ஓதும்படியான அமைப்புகளுடையதாகும் இந்த கித்தாபு. இதில் பெரிய துஆவும், பாத்திஹா ஓத வேண்டிய தர்த்தீபுகளும், ஒவ்வொரு விஷயத்திற்கும் ஓத வேண்டிய துஆக்களும், தல்கீனும் அதன் தர்ஜுமாவும் அத்துடன் நாகூர் ஆண்டவர்கள் பேரில் அஸ்மாவுல் இலாமும் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா. 7

அறபு யாஸீன் விலை அணா. 1½

அறபு யாஸீன் அஸ்மாஉல் இலாமுடன் விலை அணா. 2

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

الاسلام

# பத்ஹுல் இஸ்லாம்.

டிசம்பர்—1954.

## மனித கௌரவம் காப்பது இஸ்லாமே.

ஒருவருக் கொருவர் அன்பு செலுத்துவதும், பரஸ்பரம் கூடி வாழ்வதும் மனித இயற்கையின் சுபாவமாகும். இஸ்லாமிய இயற்கையும் இதுதான்; எந்த விஷயமும் தத்துவார்த்த அடிப்படைப் பிரகாரம் மகாமகா சிறந்ததேயாம்.

மனிதர் மனிதருடைய இகலோக வாழ்க்கையை சீர்பெறச்செய்து, மனிதர் மனிதத்தன்மையோடு வாழ வேண்டு மென்பதே இஸ்லாத்தின் உத்தம நோக்கமாகும். மேலும், மனிதர் தம் வாழ்வு முறையில் அமைதியாகவும் மனச்சாந்தியுடனும் வாழவேண்டு மென்பதும் மற்றொரு லக்ஷியமாகும். கொஞ்ச நாளைக்கு அமைதியாகவும் சாந்தமாகவும் இருந்துவிட்டுப் பிறகு புரட்சியடைந்துக் குழப்பத்திலாய் விடுமே அப்படிப்பட்ட லக்ஷிய மார்க்கமல்ல இஸ்லாம். எனவே இஸ்லாத்தில் பரிபூர்ணமான வாழ்க்கைத் திட்டங்களும் ஆன்மார்த்த உபதேசங்களும் நிறைந்திருக்கின்றன.

### அன்பின் அளவுகோல்.

இஸ்லாம் மதம் நேர்மையான பாதையில் அன்பு முறைகளைப் போதித்திருக்கிறது. அந்த அன்பு முறைக்கு ஓர் கட்டுத் திட்டமும் அனுஷ்டான முறையும் அமைக்கப்பட்டிருக்கிறது. எந்த விஷயத்தில் எவ்வளவு அன்பு செலுத்த வேண்டுமென்று இஸ்லாம் மதம் ஓர் வரம்பு முறையும் ஏற்படுத்தி யிருக்கிறது. கண்மூடித்தனமாய், ஓரே அடியாய் ஒரு விஷயத்தைப் பற்றிய அன்பில் மூழ்கிப் போய் விடாமல், நிதானமும் நடுநிலைமையும் பூண்டு, நேர்மையாய் நடந்து

கொள்ள வேண்டுமென்பது இஸ்லாத்தின் கட்டளை. இந்தக் கட்டளையை மீறி, எந்த விஷயத்திலேனும் அளவுக்கு மீறிய அன்பு செலுத்தி அதிலேயே உழன்று சீர்கெட்டுப் போகக் கூடாதென்பது இஸ்லாத்தின் சீரிய கட்டளையாகும்.

## ஷரீஅத்தும் செயலும்.

மத விஷயத்திலாயினும், உலக விவகாரங்களிலாயினும், அன்பையும் அபிமானத்தையும் செலுத்துவதற்கு, இஸ்லாமியவேதம் 'ஷரீஅத்' என்ற அளவுகோலை ஏற்படுத்தி யிருக்கிறது. அந்த அளவுகோலுக்கு உட்பட்டதாகவே இருக்கவேண்டும் மனிதருடைய ஒவ்வொரு சொல்லும் செயலும் எண்ணமும்.

மனிதன், இயற்கையாகவே மனைவி மக்களை நேசிக்கக் கூடியவன். காதலியிடம் காதலனுக்கு அபார பிரேமை இருக்கலாம். மனைவியிடம் கணவனுக்கு அபாரமான பிரியம் இருக்கலாம். குழந்தைகளிடம் தாய் தந்தைக்கு அதிகம் அதிகமான பாசம் இருக்கலாம். அதற்காக, வரம்பு மீறிப்போய், அதிலேயே லயித்து, இகபர கடமைகளை மறந்து விடவேண்டுமென்பதில்லை. மனைவியிடம் கொண்ட அன்புக்காக, அல்லும் பகலும் அனவரதமும் மனைவியின் பக்கத்திலேயே இருந்து கொண்டிருந்தால் சம்பாத்தியம் நடப்பது எப்படி? தொழுகை முதலிய வணக்க முறைகள் நடப்பது எப்படி? பிள்ளையிடம் கொண்ட பாசத்துக்காக வேண்டி, அந்தப் பிள்ளைக்கு படிப்பும் ஒழுக்கமும் வித்தையும் தொழிலும் கற்பித்துக் கொடாமல் பக்கத்திலேயே வைத்துக் கொண்டிருந்தால், அந்தப் பிள்ளை உருப்படுவதுதான் எப்படி?

இதை யெல்லாம் கருதித்தான், இஸ்லாமிய ஷரீஅத்தானது, மனிதருக்கு மனிதரின் கடமை என்ன? மனைவிக்குக் கணவனின் கடமை என்ன? பிள்ளைக்கு தாயின் கடமை யென்ன? மைந்தனுக்கு தந்தையின் கடமை என்ன? நண்பனுக்கு நண்பனின் கடமை என்ன? என்றெல்லாம் வரம்புமுறை ஏற்படுத்தி யிருக்கிறது.

## விரோதமும் வேண்டும்.

இஸ்லாம் மதம் பிறரிடம் அன்பு செலுத்துவதற்கு ஓர் அளவு ஏற்படுத்தி யிருப்பது போலவே, பிறரிடம் விரோதம் செய்வதற்கு ஓர் அளவு முறையை ஏற்படுத்தி யிருக்கிறது. அன்பு செலுத்தும் விஷயம் தான் நன்கு தெரிந்த தொன்றாகும். விரோதம் பாராட்டுவது எப்படி என்றும் இஸ்லாம் மதம் கற்பித்திருக்கிறது.

எவனொருவன் அல்லாஹ்வின் கட்டளைக்கும், திருநபி (ஸல்) அவர்களின் போதனைக்கும், ஷரீஅத்தின் சட்டதிட்டங்களுக்கும் மாறுபாடாய் புறக்கணிப்பாய் நடந்து கொள்வானோ அவன், விரோதிக்

15037

கப்படத் தக்கவன் ஆவான். அப்படிப்பட்டவனை முஸ்லிம்கள் வெறுக்க வேண்டும். அவனை நேர்வழிக்குக் கொண்டுவர பாடுபட வேண்டும். அப்படி அவன் நேர்முறைக்கு நல்வழியில் வராவிட்டால், அவனை விரோதித்துக் கண்டித்து, நேர்வழிக்குக் கொண்டு வரவேண்டியது முஸ்லிம்களின் கடமையாகும். எனவே, மனிதனின் எல்லாக் காரியமும் ஆண்டவன் கட்டளைக்கும் ஷரீஅத்தின் போதனைக்கும் ஒத்தமைந்ததா யிருக்க வேண்டும்.

மாந்தர் புரியும் வணக்கம், தியாகம், ஒழுக்கம், ஊழியம், அன்பு, விரோதம் எல்லாம் ஆண்டவனுக்காகவே இருக்க வேண்டும். எனவே, ஒருவரை விசுவாசிப்பது ஷரீத்துக்கு உட்பட்ட செயலாக இருக்க வேண்டும், ஒருவரை விரோதிப்பதும் இஸ்லாத்துக்கு உட்பட்ட செயலாக இருக்க வேண்டும்.

## இஸ்லாமிய போதனைகள்.

இஸ்லாமிய ஷரீஅத்தானது, மனிதனுக்கு எல்லாவிதமான போதனைகளையும் போதித்திருக்கிறது. காலையும் மாலையும் இறைவனை மாந்தர் எந்த முறையில் வணங்கி, இபாதத்து செய்யவேண்டும் என்று போதித்திருக்கிறது. ஆண்டவனுக்கும், அவனது ரஸூலுக்கும் வழிப்பட்ட நல்லடியாராக நடந்து கொள்ள என்ன செய்யவேண்டும் என்பதையும் போதித்திருக்கிறது. தாய் தந்தைக்குப் பணிவிடை புரிவதிலும், அவ்விருவர் மனது கோணுதபடி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் போதித்திருக்கிறது. பிள்ளையிடம் பெற்றோருக்கு என்னென்ன கடமை இருக்கிறது என்பதையும் போதித்திருக்கிறது. கணவனும் மனைவியும் எப்படிகூடி வாழவேண்டும், எப்படி கடமைகளை ஆற்றவேண்டும் என்றும் போதித்திருக்கிறது.

மனிதன் வெறும் கடமைகளை ஆற்றிக்கொண்டிருந்தால்மட்டும் போதுமா? உணவுக்கும் உடைக்கும் இருப்பிட வசதிக்கும் மற்றும் தேவைகட்கும் என்ன செய்வது? அதாவது ஜீவனோபாயம் எப்படி புரிவது? மனிதன் உழைத்துப் பாடுபடவேண்டும்; தொழில் முறை புரிந்து ஜீவனம்சம் சம்பாதிக்கவேண்டும்; வியாபாரம், கைத்தொழில், சரீர உழைப்பு இப்படிப்பட்டவழிகளில், பாடுபட்டுத் தேடி வயிறு வளர்க்க வேண்டுமே அல்லாது, பிறரை மோசம் செய்தோ ஏமாற்றியோ வழிப்பறி செய்தோ அடையும் பயனும் நலனும், மகாப் பாபகரமானதாகும். இதை 'ஹறாம்' என்றும் நேர்மையான சம்பாதனையை 'ஹலால்' என்றும் இஸ்லாம் மதம் வரம்புமுறை ஏற்படுத்தியிருக்கிறது.

இவ்வாறே உலக விவகாரங்களில் அதிகாரிகளும், மன்னர்களும், தலைவர்களும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் இஸ்லாம் மதம் போதிக்கிறது. நீதிபரிபாலனம், பிரஜைகளின் க்ஷேமம் காப்பது,

சமத்துவம் சகோதரத்துவம், தேச விவகார நிர்வாகம், வரிவசூல் செய்வதில் நேர்மை, மக்களிடத்தில் சண்டை சச்சரவின்றி சமாதானம் நிலவச் செய்தல் முதலிய அரசியல் பிரச்னைகளையும் தீனுல் இஸ்லாம் என்னும் நமது சுத்த சத்திய சன்மார்க்கம் இனிது போதித்திருக்கிறது.

## ஜிஹாதும் இஸ்லாமும்

ஜிஹாத் என்னும் விஷயம் பற்றியும் இஸ்லாம் மதம் உயரிய முறையில் போதித்திருக்கிறது. 'ஜிஹாத்' என்றால் இக்காலை சிலர் 'சண்டையிடுதல்' என்று மட்டும் அர்த்தம் கொள்கிறார்கள். ஜிஹாத் என்பதற்குப் போராட்டம் என்று பொருள் இருந்தபோதிலும் அதில் பாகுபாடு இருக்கிறது.

ஸூபியாக்களும் அவ்லியாக்களும் மகான்களும், மனதுடன் புரிய வேண்டிய போராட்டத்தையே பெரிய 'ஜிஹாத்' என்று வர்ணித்திருக்கிறார்கள். அதாவது, மனிதனுடைய சுபாவத்தில் 'நப்ஸு' என்னும் எண்ணங்கள் பலவிதமானதாகும். நப்ஸு என்பதற்கு மனப்போக்கு என்றும் பொருள் கொள்ளலாம். மனித உள்ளத்தில் பற்பலவிதமான எண்ணங்கள் தோன்றுவதுண்டு. அதில் நல்ல எண்ணங்களும் உண்டு, புண்ணியமான சிந்தனைகளும் உண்டு. அவ்வாறின்றி பாபத்தின் பக்கம் மாந்தரை இழுத்துச் செல்லும் தீய எண்ணங்களும் உண்டு.

இங்ஙனம் மாந்தரை பாபத்தின் பக்கம் இழுத்துச் செல்லும் எண்ணங்களை உற்பத்தி செய்யும் மனோ நிலையை 'நப்ஸெ அம்மாரா' என்று ஸூபியாக்கள் சொல்வார்கள். அங்ஙனம் தீய சிந்தனைகளைத் தூண்டி, மாந்தரை தப்பான வழிகளில் இழுத்துச் செல்லும் 'நப்ஸெ அம்மாரா' வுடன் ஆத்மப் போராட்டம் புரியவேண்டியது மகா முக்கியமான கடமையாகும். அத்தகைய ஆத்மப் போராட்டத்தைத்தான், மத அறிஞர்கள் என்னும் ஆலிம்கள் 'ஜிஹாத்' என்று சொல்லுவார்கள். எனவே, இத்தகைய ஜிஹாத் புரியவேண்டியது ஒவ்வொரு முஸ்லிமின் மீது அத்தியாவசியக் கடமையாகும்.

இஃதன்றி, உலக சம்பந்தமான மற்றொரு போராட்டத்தையும் 'ஜிஹாத்' என்று சொல்கிறார்கள். அநியாயமாக எதிரிகள் நம்மை எதிர்த்து நின்று சண்டையிடத் தயாராகிவிடும் போதும் நாம் சும்மா இருந்துவிடாமல், நாமும் நம்மாலான முறையில், தற்காப்புக்காக சத்திய தர்மப்போராட்டம் புரியவேண்டியவர்களாகிறோம். இப்படிப் பட்ட தற்காப்புப் போராட்டமும் ஒருவகை ஜிஹாதேயாகும். எனவே, இக்காலை பின்னர் கூறிய போர்க்கள போராட்டத்தைவிட, ஆத்மப் போராட்டமே முக்கியமானதாய் இருந்து வருகிறது. 'நப்ஸே அம்மாரா' தான் நமக்குப் மகாப் பெரும் சத்துரு; கத்தி எடுத்துக்கொண்டு நம்மை தாக்க வரும் எதிரியை நாம் வெகு எளிதில் முறியடித்துவிடலாம்;

அல்லது ஏமாற்றி விடலாம். ஆனால் நமக்குள்ளவே இருந்து நம்மை வழி கெடுத்துவிடும் 'நப்ஸெ அம்மாரா' வை எதிர்த்துப் போராடுவது மிக மிகக் கஷ்டமாகும்.

## இஸ்லாமிய கௌரவம்

மனிதன் உலகில் தோன்றியபின், கௌரவமாய் வாழ்க்கை நடத்த வேண்டும். இலௌகிக விஷயத்திலும் வைதிக விஷயத்திலும் பிறர் இகழுக்கு இலக்காகாத முறையில் சீரும், சிறப்பும் நிலவ நடந்து கொள்பவனே உண்மையான முஸ்லிமானவன். இதர மதஸ்தர்களிடம் நம் முஸ்லிம்கள் கௌரவம் பெறவேண்டுமானால், முதலில் நம்முடைய கீர்த்திப் பிரதாபம் மங்கிப்போகாத முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

உலக மதங்களில் இஸ்லாமே உயர்வும் கண்ணியமும் வாய்ந்த மதம். அதற்கேற்ப முஸ்லிம்கள் ஒழுக்கத்திலும் குணத்திலும் கௌரவமாக வாழ்ந்து, சீரும் சிறப்பும் பெற்று, உலகில் தலை சிறந்து விளங்க வேண்டும். இஸ்லாத்தின் பிரதான இலக்ஷியங்களி லொன்று மனித கௌரவம் காக்கப்படும் முறையில் கண்ணியமாய் நடந்துகொள்ள வேண்டும்.

---


## மஜ்மூஅ முனாஜாத்.

(சுத்தத் தமிழ்)

(இரண்டாம் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஹக்கு பேரில் முனாஜாத்து, யாஸையிதி மாலை, யாகுத்பா மாலை, தலை பாத்திஹா, ஸலவாத்துப் பாட்டு, முத்து மணி மாலை, பக்தி ஆனந்த பாத்திமுத்து மாலை, முஹியித்தீன் முனாஜாத், காஜா பந்தே நவாஸ் முனாஜாத், சரசுவதி மாலை, காஸிம் புலவர் இன்னிசை, கலியாண வாழ்த்துப் பதங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன.

இதன் விலை அணா. 8

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 1—4—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# இனும்! இனும்!!

## ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர் 1955.

இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காதுவ் ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது.

எங்களிட மிருந்து ஒரே நேரத்தில் எங்களது சொந்த பிரசுரங்களுள் ரூபாய் 10க்கு குறைவில்லாமல் சொந்த உபயோகத்திற்கு கிதாபு, புஸ்தகம் தருவிப்பவர்களுக்கு ஷை காலண்டர் ஒன்று (எங்களிடம் காலண்டர் ஸ்டாக் யிருக்கும் வரை) இனுமாகச் சேர்த்து அனுப்பப்படும்.

---

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

(நான்காவது பகுதி)

# திருக் குர்ஆன் :: :: சாரசங்கிரஹம்.

பல விஷயங்களைப் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி.)

## இஸ்லாத்தில் பரிபூரணமாய் பிரவேசியுங்கள்.

முஸ்லிம்களே! இஸ்லாம் சன்மார்க்கத்தில் பரிபூரணமாய் பிரவேசித்துக் கொள்ளுங்கள். ஷைத்தானுடைய பாதையைப் பின்பற்றி நடக்காதீர்கள். அவன் உங்களுடைய பகிரங்க விரோதியாவான். இங்ஙனம் மிகத் தெளிவான கட்டளை கிடைக்கப் பெற்று பிறகுங் கூட, நீங்கள் வழி விலகிச் சென்று உழல்வீர்களாயின்-(இது உங்கள் துர்பாக்யமாகும்)-ஞாபக மிருக்கட்டும். அல்லாஹ் (தஆலா) மகத்தான சக்தியுடையவனாக யிருக்கிறான். மேலும் அவன் மகா விவேக முடையவனாகவு மிருக்கிறான். (ஸூரா :-பகரா : ருகூ : 25)

## உண்மைக்கே நியாய சாக்ஷியம் கூறுங்கள்.

முஸ்லிம்களே, ஸ்திரமாக நியாயத்தின் மீது நிலைத்திருங்கள். சதா காலமும், ஆண்டவன் ஒப்பத்தக்க (மெய்) சாக்ஷியமே கூறுங்கள். இம்மெய் சாக்ஷியம், உங்கள் தாய் தந்தையருக்கோ, உற்றார் உறவினருக்கோ விரோதமாய் இருந்தாலும் சரியே (உண்மையை மறைக்காதீர்கள்). மேலும், சாக்ஷியம் கூறுங்கால் அதற்குரியவன் யார், பணக்காரனு-ஏழையா என்று ஓரம் பாராதீர்கள். ஆண்டவன் அவ்விரு பேர்களையும் போஷிக்கக் கூடியவனாக இருக்கின்றான். ஆகவே, நீங்கள் உங்கள் சுயநலப் பாசங்களுக்கு கீழ்ப்பட்டுப் போய்விடா திருப்பது உங்கள் கடமையாகும். (எக்காரணத்தாலும்) நீங்கள் சத்தியத்தை விட்டு பிறழ்ந்துவிடத் துணியாதீர்கள். ஞாபக மிருக்கட்டும்; நீங்கள் (தாக்ஷண்யத்துக்குப்) பணிந்து (பொய்) சாக்ஷியம் கூறுவீர்களாயின், அல்லது உண்மையை கைவிட்டு விடுவீர்களாயின்-அல்லாஹு தஆலா உங்கள் செயல்களை யெல்லாம் பார்வை யிட்டுக் கொண்டுதா னிருக்கிறான். (ஸூ: அந்நிஸா: ரு: 2)

## அமானத்துப் பொருளை உரியவர்க்குக் கொடுங்கள்.

ஆண்டவன் உங்களுக்குத் தெளிவான கட்டளை யிடுகின்றான். நீங்கள் 'அமானத்' பொருள்களை, அதற்குரியவர்களிடம் சேர்த்து ஒப்படைத்து விடுங்கள். உங்களை நீதிவானாக நியமித்தார்களாயின், நீங்கள் முகதாக்ஷண்யம் பாராமல், நியாயத் தீர்ப்பு செலுத்துங்கள்.

ஆண்டவன் இங்ஙனம், நல்லுபதேசங்கள் செய்து கொண்டே இருக்கின்றான். அந்த அல்லாஹ் யாவற்றையும் கேட்கக் கூடியவனாகவும் பார்க்கக் கூடியவனாகவு மிருக்கின்றான். (ஸூ: அந்நிஸா ; ரு: 8.)

## நியாயத்தின் போது எவர் விரோதத்தையும் அஞ்சாதீர்கள்.

முஸ்லிம்களே, ஆண்டவனுக்காகவென, எப்போதுமே நியாயத்தையொட்டியே சாக்ஷியம் கூறுவதற்காக, எழுந்து நில்லுங்கள். இங்ஙனம் நடந்து கொள்வதில், எந்த வகுப்பாரின் விரோதமும், உங்களை அச்சுறுத்தி, நீங்கள் நியாயத்தை விட்டுப் புரண்டு போகச் செய்துவிட வேண்டாம். (அதாவது நியாயம் கூற எவருக்கும் நீங்கள் அஞ்சாதீர்கள்). எனவே எப்போதும் நியாயமே செலுத்திக் கொண்டிருங்கள். இந்த நல்லம்சம் தான், பரிசுத்தத் தன்மைக்கு நெருங்கிய சாதனமாகும். சதா ஆண்டவனுக்குப் பயந்து கொண்டிருங்கள். ஏனெனின் அவன், நீங்கள் செய்பவை யெல்லாவற்றையும் அறிந்து கொண்டிருக்கிறான். (ஸூ: அல்மாயிதா; ரு: 3.)

## இன்ஜீல் வேதத்திலும், சன்மார்க்கமும் ஜோதியும் உண்டு

அதன் பிறகு (அல்லாஹ்வாகிய) நாம், அதே தீர்க்கத்தரிசி (நபி)களின் மார்க்கத்திலேயே, மர்யமின் மகன் ஈஸாவை, தவ்றாத் வேதத்தைக் கொண்டு உண்மை கூறுபவராக (நபியாக) ஆக்கி அனுப்பி வைத்தோம். மேலும் நாம் அவருக்கு இன்ஜீல் (பைபிள்) வேதமும் அருளினோம். அதில் (மக்களுக்கு) சன்மார்க்கமும் ஞானப் பிரகாசமும் உண்டு. இன்ஜீல் வேதமானது அதற்கு முன் உண்டா யிருந்த வேதங்களை யெல்லாம் மெய்யாக்கி வைக்கிறது. அது சுயமாக, பக்தி விசுவாசிகளுக்கு சன்மார்க்கமாகவும் நல்லுபதேசமாகவும் அமைந்திருக்கிறது. எனவே இன்ஜீல் வேதத்தையுடைய (கிறிஸ்து)வர்கள், இறைவன், இன்ஜீலில் போதித்துள்ள வண்ணம் மக்களுக்கு கட்டளைகளை எடுத்துச் சொல்வார்களாக. எனவே, ஆண்டவன் போதித்த கட்டளையின் பிரகாரம் கடமையை எடுத்துப் போதிப்பதில்லையோ அவர்கள் பாபிகளாவர். (ஸூ: அல்மாயிதா; ரு: 7.)

## ஹஜ்ஜில் இஹ்ராம் கட்டிய நிலையில் வேட்டையாடுதல்.

(ஹஜ்ஜின் போது) இஹ்ராம் கட்டிய நிலையில், கடலில் (மீன்) வேட்டை யாடுவதும், கடலிலிருந்து எடுக்கப்பட்ட (மீன் முதலிய) உணவுப் பொருட்களும், அந்நிலையிலும் உங்களுக்கு ஹலாலாக்கப்பட்டிருக்கிறது; அவைகளினால் நீங்கள் பிரயோஜனம் பெறுவதற்காகவேயாம். ஆனால் நீங்கள் இஹ்ராம் கட்டிய நிலையில் இருக்கும் போது,

வனங்களில் (தரையில்) வேட்டையாடுவது, உங்கள் மீது ஹறாமாக்கப் பட்டிருக்கிறது. ஆதலின் ஆண்டவனுக்கு பயந்தொழுகுங்கள். அவ் வாண்டவனிடமே (மறுமையில்) நீங்கள் எல்லோரும் திரும்பிச் செல்ல வேண்டியவர்களா யிருக்கிறீர்கள். (ஸூ: அல்மாயிதா; ரு: 13.)

## அவிவேகிகளே, தம் மக்களை கொல்வார்கள்.

தங்கள் (பெண்) மக்களை, அவிவேகத்தினலும் மௌடிகத் தனத் தினலும் கொன்று போடுகிறார்களே அவர்கள், சந்தேகமின்றி, (மறுமை யில்) மகா நஷ்டவாளிகளா யிருப்பார்கள்; மேலும் இறைவன் அவர் கட்கு ஜீவனோபாய சௌகர்யமும் செய்திருந்தான். ஆனல் அன்னோர் ஆண்டவன் மீது பொய்யையும் பழியையும் சுமத்தி, (ஹலாலா யிருந் ததை) தங்கள் மீது ஹறாமாக்கிக் கொண்டார்கள். நிச்சயமாக இன்னோர், நேர்மையான பாதையி லிருந்து பிரண்டு வழி கெட்டுப் போனவர்களேயாவர். (என்ன கூறினும்) இவர்கள், நல்ல வழிக்கு ஒரு போதும் வரவே மாட்டார்கள். (ஸூ: அல்அன்ஆம்; ரு: 16.)

## மனிதன் இறைவனின் பிரதிநிதியாவன்.

மாந்தரே, அவ்விறைவன், உங்களைப் பூமியில் தன் பிரதிநிதியாக (கலீபாவாக) செய்து வைத்தான். சில பேர்களுடைய பதவியை சில பேர்களுடைய (பதவியை) விட உயர்வாக்கி வைத்தான். இறைவன் தன் அருட் கொடைகளால் உங்களை சோதிப்பதற்காகவே இங்ஙனம் செய்தான். சந்தேக மில்லாமல், உங்கள் இரக்ஷகன் துரிதமாய் நற்கூலி யளிக்கக் கூடியவனாக இருக்கிறான். இன்னமும் சந்தேக மில்லாமல், அவன் மன்னிப்பவனாகவும் அருளாளனாகவும் இருக்கின்றான்.

(ஸூ: அல்அன்ஆம்: ரு: 20)

## ஈமானுடையோர் சதா சுவர்க்கத்தி லிருப்பர்.

நன்னம்பிக்கை (ஈமான்) கொண்டு நற்காரியங்கள் புரிந்தவர்களாகிற வர்கள்-(நலமடைவார்கள்). நற்காரியம் புரிந்தவர்கள் மீது யாம் அவர் களின் ஸ்திதியைக் காட்டினும் அதிகமான சுமையை (கஷ்டத்தை) போட மாட்டோம். இப்படிப் பட்ட நல்லவர்களே, சுவர்க்க லோகத் தில் பிரவேசிப்பார்கள். மேலும் அங்கேயே சதா காலமும் தங்கி யிருப்பார்கள். அவர்கள் உள்ளங்களில் உலக சம்பந்தமான ஏதேனும் சஞ்சலங்கள் இருந்த போதிலும், அதையும் நாம் நிவர்த்தித்து விடு வோம். அவர்கள் எந்த சுவர்க்கத்தில் வசிப்பரோ அதன் கீழ், நதிகள்

ஓடிக் கொண்டிருக்கும். அவர்கள் (இவற்றால் உளம் மகிழ்ந்து) "எங்கட்கு இந்த சுவர்க்கத்துக்கு வர சன்மார்க்கம் காட்டித் தந்த இறைவனுக்கே சகல நன்றியும் உண்டாகுக; எங்கட்கு இச்சன்மார்க்கம் காட்டித் தந்திராவிடின், நாங்கள் நல்வழி பெற்றிருக்க மாட்டோம்; சந்தேகமின்றி, எங்கள் இறைவனு லனுப்பப்பட்ட திருத்தூதர் (நபி) எங்களுக்காக சத்தியத் தூதையே கொண்டு வந்தார்" என்று சொல்லு வார்கள். பிறகு, அன்னவர்களை அழைத்து "ஆம்! இதுதான், நீங்கள் உலகில் ஈமான் கொண்டு நற்கருமங்கள் புரிந்தீர்களே, அதற்குப் பகர மாக, நாம் வாரிஸாக்கிவைப்போ மென்று வாக்களித்த சுவர்க்கமாகும்" என்று வியக்தமாய் சொல்லி விடப்படும்.

(ஸூ: அல்அஃராப்: ரு: 5.)

## சுவர்க்கத்துக்கும் நரகத்துக்கும் மத்திபம் 'அஃராப்'

சுவர்க்க வாசிகளுக்கும் நரகவாசிகளுக்கு மிடையில், இடையிட்ட ஒரு மத்திப ஸ்தலம் இருக்கும். அதன் பெயரே அஃராப். இந்த அஃராபில் வசிப்பார்களே அவர்கள், சுவர்க்க வாசிகளையும் நரக வாசிகளை யும், இவ்விருதிறத்தாரின் முகத் தோற்றங்களைக் கொண்டே அறிந்து கொண்டு விடுவார்கள். அங்ஙனம் சுவர்க்கவாசிகளை அறிந்து கொண்டு 'ஸலாமுன் அலைக்' என்று (ஆசி மொழி) சொல்வார்கள். இந்த (மத்திய லோக) அஃராப் வாசிகள், அப்போது சுவர்க்க லோகத் துக்குள் போக இயல மாட்டார்கள். ஆனால், சுவர்க்கவாச பாக்கியம் கிடைக்குமென்ற நம்பிக்கை யுடையவர்களாக இருப்பர். இன்னவர் களுடைய கண்ணோட்டம், நரகவாசிகளின் மீது விழுங்கால், "ஏ எங்கள் இறைவனே! எங்களை இந்த அட்டூழியக்கார கூட்டத்துடன் சேர்த்து விடாதே" என்று பிரார்த்தித்து வேண்டிக் கொள்வர். பிறகு, அந்த அஃராப் (மத்யலோக) வாசிகள்; நரக வாசிகளில் தங் களுக்கு (உலகில்) அறிமுகமானவர்களைக் கண்டு பிடித்துக் கொண்டு "ஏ! (அதமர்களே) உங்களுடைய (அந்த) அகங்காரங்களும், செல்வங் களும் உங்களுக்கு (இங்கே) பயன் அளித்தனவா? இந்த சுவர்க்க வாசிகளைப் பற்றி ஞாபக மிருக்கிறதா? பிரமாணம் செய்து செய்து, 'இவர்கள் மீது ஆண்டவன் ஒரு போதும் அருள் புரியமாட்டான்' என்று (அகந்தையோடு) சொன்னீர்களே, அவர்களே தான் இவர்கள்!" என்று இரைந்துச் சொல்வார்கள். (ஸூ: அல்அஃராப்: ரு: 6)

(தொடரும்)

(3-வது பகுதி)

பண்டை அரபு நாட்டு வள்ளள்

# ஹாத்திம் தாயீ வாழ்க்கை வரலாறு.

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

## தனக்கென வாழார்

**ஹா**திம்தாயீயின் சிறந்த குணங்களிலொன்று தனக்கென வாழாமைதான். அதாவது தன் பொருள், உடல், ஆவியாவும் கஷ்டப் படும் லோக மக்களுக்காக பயன்படவேண்டு மென்று அவர் வாழ்ந்து வந்தது தான். இஸ்லாமிய வேதமாகிய திருக்குர்ஆன் ஷரீபிலும் ஒரு வாக்கியம் "நீங்கள் எதை மிகவும் விசுவாசிக்கிறீர்களோ அதையே பிறருக்கும் அளித்து உதவாத வரை நீங்கள் நலம் பெற்றவர்களாக மாட்டீர்கள்" என்று போதிக்கப்பட்டுள்ளது. ஹாத்திம்தாயீயின் ஒழுக்கம் அக்காலத்திலேயே இந்த திருவாக்கியப் போதனைக்கு முற்ற முற்ற ஒத்திருந்தது தான் ஆச்சரிய மாகும்.

தன்னிடமுள்ள அரும்பொருட்களில் எதை யார் கேட்டாலும் தட்டாமல் அதை கொடுத்து உதவுவதில் ஹாத்திம் தாயீ ஒரு சமயமும் தவறியதில்லை. இன்ன பொருளைத்தான் பிறருக்குக் கொடுக்கலாம், இன்னதை யாருக்கும் கொடுக்க லாகாது என்ற வரன்முறை அவரிடம் இல்லை.

ஹாத்திமுக்கு இரண்டு பொருள்கள் மிகப் பிரியமும் அவசியமும் உடையவை. தான் சவாரி செய்யும் குதிரையும், அணிந்திருக்கும் ஆயுதமுமே அவை. வீரமும் போராட்டமும் பிறவித் தொழிலாய்க் கொண்டிருந்த அக்கால அரபியருக்கு, அசுவமும் கைவாளும் எத்துணை அத்தியாவசியப் பொருட்கள் என்பதை விரித்துரைக்கவும் வேண்டுமோ? அப்படிப்பட்ட வஸ்துக்களையும் சில சமயங்களில் ஹாத்திம், பிறருக்குக் கொடுத்து உதவுவார் எனின், அவருடைய தாராள மனம்தான் என்னே!

## ஒருசம்பவம்.

ஒரு சமயம் ஹாத்திம்தாயீ எங்கோ வெகுதூர யாத்திரையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார். நடுவழியில் கடும் பாலைவனத்தில் ஒரு ஏழை அரபி, பாதசாரியாய் கடுநடை புரிந்துப் போய் கொண்டிருந்தார். ஹாத்திம் தாயீ அவ்வரபியின் ஏழ்மை நிலைக்கு இரங்கி உடனே அசுவத்தை அங்கே நிறுத்தி வினவலானார்.

ஹாத்திம்:—ஐயா, நீவிர் எங்குச் செல்கின்றீர்?

அரபு:—நான் பஹ்றைனுக்குச் செல்கிறேன். அங்குதான் என் உறவினர் இருக்கிறார்கள்.

ஹாத்திம்:—ஓ! பஹ்றைனுக்கா? அவ்வூர் இங்கிருந்து பல காத தூரம் இருக்குமே; எப்படிப் போய்ச் சேருவீர்?

அரபு:—என்ன செய்வது போய்த்தான் தீரவேண்டும்.

ஹாத்திம்:—நடந்தா போய்ச்சேருவீர்!

அரபு:—ஆம்!

ஹாத்திம்:—பரிதாபம். நீவிர் வாலிபரா யில்லை. அவ்வளவு தூரம் கடும் பிரயாணம் செய்ய உமது கால் கரங்களில் சக்தி இல்லை. நான் என்னுடைய இந்தக் குதிரையை உமக்குக் கொடுத்துவிடுகிறேன். நீவிர் இதன் மீதமர்ந்து ஊர்ப்போய்ச் சேருவீராக.

அரபு:—தாங்கள் மிக்க தயவுடையவராய்க் காணப்படுகிறீர்? உங்கள் அன்புக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன். குதிரை மீது நீங்களேறிச் செல்லுங்கள். குதிரை எனக்களித்து விட்டால், தாங்கள் எங்ஙனம் ஊர்போய்ச் சேருவீர்கள்?

ஹாத்திம்:—யாத்திரீகரே, அதைப்பற்றி நீவிர் கவலையுறவேண்டாம். என் ஊர் அருகில் தான் இருக்கிறது. நான் நடந்துபோய் சேர்ந்து விடுவேன். நீவிர் தயவு செய்து என் குதிரை மீது ஏறிக்கொள்க.

ஹாத்திமின் வற்புறுத்தலுக்கிணங்கி அந்த எளிய அரபி குதிரை மீது ஏறிக்கொண்டு விடை பெறலானார்.

அரபு:—போய் வரட்டுமா? என்னால் உங்களுக்கு மிகவும் சிரமம் ஏற்பட்டுவிட்டது.

ஹாத்தீம்:—அன்பரே, அஃதிருக்கட்டும். நீர் போகும்போது வழியில் எவனாவது முரடன் உம்மை மறித்து இந்தக் குதிரையைப் பிடுங்கிக்கொண்டால் என்ன செய்வீர்? அவனை எதிர்த்துப்போராட உம்மிடம் உடைவாள் இருக்கிறதா?

அரபு:—இல்லையே!

ஹாத்தீம்:—என் உடைவாளைப் பெற்றுக்கொள்ளுங்கள்; இதோ!

அரபு:—(பெற்றுக்கொண்டு) என்னால் தங்களுக்கு எவ்வளவோ தொல்லை. போய் வரட்டுமா?

ஹாத்தீம்:—சுகமே போய் வாரும். ஆனால் ஒரு சந்தேகம். நீவிர் உமது ஊர்போய்ச் சேர இரண்டு மூன்று நாட்களாகுமே அதுவரை பசியாற்ற உணவு பொருள் என்ன வைத்திருக்கிறீர்?

அரபு:—எல்லாம் செலவழிந்து விட்டது. இப்போது கைவசம் ஏதுமில்லை. அதைப்பற்றிப் பாதகமில்லை. ஊர்போய் சேர்ந்த பின் வயிறு நிறைய உணவு அங்கு கிடைத்துவிடும்.

ஹாத்தீம்:—என்னிடம் கொஞ்சம் பொரித்த இறைச்சியும் பேரீத்தம் பழமும் இருக்கின்றன. இதை நீவிர் வைத்துக்கொள்ளும்.

அரபு:—தங்களுக்கு வேண்டுமே!

ஹாத்தீம்:—எனக்கா? ஊர் அருகில் உள்ளது. நான் அங்கு மாலைக்குள் போய் விடுவேன். நீர் போய் வாரும்.

இவ்வாறு ஹாத்திம் தாயீ அந்த ஏழை வழிப் பிரயாணிக்கு, தன்னுடைய அருமைப் புரவியையும், அரிய உடைவாளையும், உணவுப் பண்டங்களையும் கொடுத்து "தனக்கென வாழாப் பிறர்க் குரியாளர்" என்ற பெயர் பெற்றார். இதுபோன்ற இன்னம் எத்தனையோ அருஞ் சம்பவங்கள் ஹாத்திம் தாயீயின் ஜீவியத்தைப் புனிதப்படுத்தியுள்ளன.

## மனைவியின் சாக்ஷியம்:

ஹாத்திம் தாயியின் தயாள குணத்தையும், அருந் தியாகத் தன்மையையும், அக்கால அரபுகளே மிகக் கொண்டாடினார்கள். ஹாத்திம் தாயீயின் நற்பெயர் நாற்றிசையும் பாவியிருந்தது. தயாள மூர்த்தியாய், கண்கண்ட தயாபரனாக அவரை அக்கால அரபுகள் கருதினார்கள். நல்லகாலமாய், நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது திருவவதாரத்தின் பொருட்டால் அரபு நாட்டில் விக்கிரக வணக்கம் அடியோடு ஒழிக்கப்பட்டு விட்டது. அங்ஙனமின்றேல், ஹாத்திம் பெயராலும் ஒரு ஸ்வாமி (விக்கிரஹம்) ஏற்படுத்தப்பட்டு பூஜைகள் நடைபெறும்.

ஹாத்திம் தாயீயின் மனைவியர் பெயர் 'மாவியா பின்த் அப்ரா' என்பது. இவ்வநிதை ஆதியில் ஹாத்திமின் தான தருமத்தை எதிர்த்துத் தடுத்து வந்தார். 'ஊதாரித்தனமுள்ள புருஷன்' என்று ஏளனம் செய்து வந்தார். பிறகு, ஹாத்திமுடைய இரக்கமுள்ள நெஞ்சையும், காருண்ய குணத்தையும் அபார அன்பையும் அறிந்து, அவரைப் பாராட்டத் தொடங்கினார். இவ்வம்மையார் தம் கணவருடைய கொடை வள்ளல் தன்மையைப் பற்றி ஒரு சம்பவத்தை கூறியுள்ளார். ஹாத்திம் தாயீயின் நல்வாழ்க்கைக்கு இது ஒரு நற் சாக்ஷிய மாகும்.

"மனைவியர் கூறுவதாவது:— என் கணவரின் அபார கொடை வள்ளல் தன்மைகளைப் பற்றி நானே ஆச்சரியப்படுவ துண்டு. அவரைப் போன்ற தாராள மனதை யுடைவரை நான் கண்டதில்லை. ஒரு சம்பவம் பற்றி கூறுகிறேன்:

ஓராண்டு எங்கள் ஊரில் கடுமையான பஞ்சம் தோன்றியது. எங்கு நோக்கினும் பசும் இலைகளைக் காணமுடியாது; உணவுப் பொருள் கிடைப்பது ஜீவாமிருதம் (ஆபே-ஹயாத்) கிடைப்பது போலிருந்தது. மக்கள் உணவுப் பொருட்களுக்குப் பதிலாய் தங்கள் ஒட்டகம், கூடாரம், சொத்து செல்வம் யாவற்றையும் இழந்து போய், உடுக்கும் உடையையும் விற்று, வயிற்றை கழுவிக்கொள்ள வேண்டியதாயிற்று. எங்கள் கூட்டத்தினர் (கபீலாகாரர்), விற்பதற்கு சாமான் இன்றி வாங்குவதற்கு காசு பணமின்றி, பட்டினியும் பசியுமாய் கிடக்க வேண்டியதாயிருந்தது. எங்கள் வீட்டிலும் இதே கதியாகத்தான் இருந்தது. உண்பதற்கு ஒன்றுமில்லாததால் அன்றெல்லாம் பட்டினியா யிருந்தோம். பட்டினிக் காரணத்தால் இராத்தூக்கமும் கிடையாது. எனக்கு இரண்டு குழந்தைகள். அத்மீ என்பதும், ஸபாஹ் என்பதும் என் செல்வங்களின் பெயர்கள். ஸபாஹ் சின்ன குழந்தை. தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தது; அத்மி பெரிய பையன். அவனும் அழுது துடித்தான். அவனை சமாதானம் சொல்லிப் பார்த்தேன். அழுது அழுது தொண்டைத் தண்ணீர் வற்றித் தூங்கிவிட்டான். என் கணவர், சின்ன குழந்தை, பசிக்காக கதறி அழுவதைக்கண்டு சகிக்கொணாது அதைத் தேற்றலானார். பிறகு சின்ன குழந்தையும் அழுகை ஓய்ந்து உறங்கி விட்டது. எங்கள் பசியின் கொடுமையை நாங்கள் யாரிடம் போய்ச் சொல்லி யழுவோம்? என் கணவர் ஹாத்திம் தனக்குப் பசியில்லாதது போல் என்பால் அபிநயித்து, சந்தோஷ முகத்தைக் காட்டிக் கொண்டு, எனக்கு ஆறுதல் மொழிகூறி தேற்றத் தொடங்ினார். நான் ஒரளவேனும் பசியின் வேதனையை மறந்து மகிழ்ச்சியுற வேண்டுமென என் மனத்தை வேறு பக்கம் திருப்புவதற்காக, இனிய கதைகளையும், அரிய வசனங்களையும் எனக்கு மிருதுவாய்க் கூறலானார். நான் என் குழந்தைகளை தாலாட்டித் தூங்க வைத்ததுபோல், அவர் என்னைத் தூங்க வைப்பதற்குத்தான் அம்மாதிரி கதையும் இன் மொழியும் கூறி பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தார் போலும்! நான், அவருடைய பசிக் கொடுமையை ஒருவாறு உற்றுணர்ந்திருந்தே னாயினும், அவருக்கு மனச்சாந்தியையும் திருப்தியையும் உண்டாக்குவதற்காக வென்று, நான் கண்களை மூடிக்கொண்டு தூங்கிவிட்டதைபோல் பாவனை செய்தேன்.

"மாவியா, இதற்குள் தூங்கி விட்டாயா?" என்று என்னைக் கேட்டார்.

நான் அதற்குப் பதிலொன்றும் சொல்லவில்லை. அயர்ந்து துயில்வது போல் பாவனை செய்தேன். அப்படியே நான் கொஞ்ச நேரம் இருந்து, அவர் என்ன செய்கிறார் என்று கவனித்துக் கொண்டிருந்தேன்.

அப்போது எங்கள் கூடாரத்துக்கு வெளியில் யாரோ வந்து கூப்பிட்டது போலிருந்தது. என் கணவர் ஹாத்திம், என்னை தூக்கத்திலேயே விட்டு எழுந்து வெளியே சென்றார். நான் கண்ணைச் சிறிது திறந்து அவர் என்ன செய்கிறார் என்று பார்த்தேன். வந்தவர் பெண்ணொருத்தி. அவள் என் கணவரை நோக்கி,

"ஹாத்திம்! தங்களுக்கு ஆண்டவன் நல்லருள் புரிவானாக! என் குழந்தைகள் பசியால் துடிக்கின்றன. நாய்போல் ஊளையிட்டுக் கதறுகின்றன. அச்சிசுக்களின் பசிக்கனலைத் தணிக்க என்னிடம் உணவுப் பொருள் ஒன்றுமேயில்லை. தாங்கள்தான் என் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும்" என்று பிரலாபித்தாள்.

"ஓ அப்படியா, சரி, நீ போய் உன் குழந்தைகளை இங்கு அழைத்து வா, அவைகளின் பசியைப் போக்குகிறேன்" என்று கூறி, அம்மாதின் சஞ்சலத்தைத் தேற்றி அனுப்பினார். அப்பெண், சந்தோஷமாகி, தன் குழந்தைகளை கொண்டு வருவதற்காக விரைந்து சென்றாள்.

எனக்குப் பேராச்சரியமாய் இருந்தது. 'எங்கள் வீட்டில், நாங்களும் எங்கள் குழந்தைகளும் பட்டினியாய் கிடக்கிறோமே, உண்பதற்குரிய பொருள் ஒன்றுமே எம்மிடம் கிடையாதே. இவர், அப்பெண் மணியின் குழந்தைகளின் பசிப்பிணியை எங்ஙனம் போக்குகிறார் பார்ப்போம்' என்று சிந்தித்த வண்ணம் அவர் செய்கைகளைக் கூர்ந்து நோக்கினேன்.

என் கணவர் வீட்டுக்குள் வந்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து நின்றார். நான் கண் விழித்து அவருக்கு அனுதாபமாக கேட்கலானேன்:

"என் ஆருயிர்த் தோழரே! நாமிருவரும் பட்டினியா யிருக்கின்றோம். நம் இரு குழந்தைகளும் பசியால் நலிந்து அழுதுத் தூங்கி விட்டன. நம்மிடமோ உண்பதற்குரிய பொருள் ஒன்றுமில்லை. அங்ஙனமிருக்க, அந்தப் பெண்பாலுடைய குழந்தைகளை அழைத்து வரச் சொன்னீர்களே, அவைகட்கு உண்பதற்கு என்ன ஆகாரம் கொடுக்கப் போகிறீர்கள்?" என்றேன்.

"என் நாயகி! நீ வருந்தாதே. சர்வ சிருஷ்டிகளையும் படைத்து ரக்ஷிக்கும் சர்வேஸ்வரனாகிய அல்லாஹு தஆலா, அக்குழந்தைகளுக்குரிய 'ரிஜ்கை' (ஆகாரத்தை) நம்மிடத்தில் ஒப்படைத் திருப்பதால் தான், அப்பெண்ணை இங்கு அனுப்பி வைத்தான். அவளது குழந்தைகளுக்கு மட்டுமல்ல, அவளுக்கும் உனக்கும் உன் குழந்தைகளுக்கும் இன்னம் கொஞ்ச நேரத்தில் உணவு தருகிறேன், பொருத்திருந்து ஆண்டவனருளைப் பார்" என்று சொன்னார் ஹாத்திம்.

இங்ஙனம் என்னைத் தேற்றி விட்டு, கத்தியை எடுத்தார். அதைக் கூர்மையாய்த் தீட்டினார். தம் உயிர் போல் அருமையாய் போஷித்துக் காத்து வந்த குதிரையை பற்றி இழுத்து கீழே தள்ளினார். அதன் கழுத்தில் கத்தியை வைத்து அல்லாஹ் பெயரை சொல்லி அறுத்து விட்டார். தோலை உரித்து, அதன் மிருதுவான மாமிசங்களை துண்டு துண்டாக வெட்டி எடுத்தார். விறகை சேகரித்து தணல் மூட்டினார். அந்த நெருப்பில் குதிரை மாமிசத்தை பொரித்தெடுத்தார். நானும் அவருக்கு துணை புரிந்தேன்.

அதற்குள், அந்த ஸ்திரீ தன்னிரு குழந்தைகளை அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தாள். என் கணவர், முதலில் அந்தக் குழந்தை களுக்கு உணவளித்து பசியை போக்கினார். பின்னர், அப்பெண்ணை நோக்கி, "நீயும் பசியை போக்கிக் கொள், இதை உண்ணு" என்று உபசரித்தார். அவளும் உண்டு பசியாறி வாழ்த்தி விட்டுப் போனாள். அதன்பின், நாங்கள் எங்கள் குழந்தைகளையும் எழுப்பி, அவைகளின் பசியையும் போக்கினோம். நாங்களும் உண்டு, இறைவனைத் துதித் தோம்.

நான் என் கணவரை நோக்கி, "பிராணபதி! நாமெல்லோரும் தின்றும் இம்மாமிசம் மிகவும் மிஞ்சி விட்டதே. இதை எடுத்து பத்திரப் படுத்தி வைக்கிறேன், நாளைக்கு சாப்பிட உதவும்" என்றேன்.

அதற்கவர் "ஏ பேதைப் பெண்ணே! இன்றைக்கு உணவளித்த இறைவன், நாளைக்கு நமக்கு உணவளிக்க மாட்டானோ? நாளைக் கவலை நாளைக்கு ஆகட்டும். இச்சமயம் நாம் மட்டும் பசியாறி திருப்தியுற்றால் போதுமா? நம்முடைய கபீலாக்களில் எத்தனையோ பேர் பட்டினியும் பசியுமாய் படுத்துறங்குகிறார்களே, அவர்களை நாம் மறந்து விடலாமா? அவர்களையும் உணவு உண்ண அழைப்போம்" என்று கூறினார்.

"ஏ ஜனங்களே, கூடாரங்களில் உறங்கும் தோழர்களே! எழுந்து வாருங்கள், உணவு உங்கட்காக தயாராய் இருக்கிறது, வாருங்கள்" என்று கூச்சலிட்டு கூவி யழைத்தார் என் கணவர் ஹாத்திம்.

அக்கம் பக்கத்துக் கூடாரங்களிலிருந்து எங்கள் இனத்தைச் சேர்ந் தவர்களும் அல்லாதவர்களும் பலர் வந்து கூடினார்கள். எல்லோருக்கும் அவரவர் இஷ்டம் போல, மாமிசத்தை அறுத்தெடுத்து பொரித்துத் தின்ன விட்டு விட்டார் ஹாத்திம் தாயீ. அங்ஙனம் விருந்தினர் களுக்கு குதிரை மாமிசம் முழுவதையும் எதேச்சையாய் விட்டு விட்டு அவர், போர்வையை போர்த்திக் கொண்டு மூலையில் அமர்ந்து உறங்க லானார். நாங்களும் உறங்கி விட்டோம்.

மறுநாள் அதிகாலை எழுந்து பார்த்தேன். எலும்புகளும் தோல் துண்டுகளும் தவிர்த்து வேறொன்றும் அந்தக் குதிரையின் உடலினின்றும் மிஞ்சவில்லை. அதைக் கண்டு ஹாத்திம் மிகவும் சந்தோஷப்பட்டார். தன் ஒருவனுக்கே இதுகாறும் பயன்பட்ட அக்குதிரை, இன்று பலபேர்களுக்கும் நல்ல முறையில் பயன் பட்டதைக் கண்டு, உள்ளார மகிழ்ந்து இறைவனைப் போற்றினார்.

ஆனால், அவர் வயிறார உண்டார் என்று கருதுகிறீர்களா? இல்லவே இல்லை. என்னுடைய வற்புறுத்தலுக்காகவும், குழந்தைகளின் திருப்திக்காகவும் அவர் இரண்டொரு துண்டு புசித்தாரே யல்லாது, அவர் வயிறு நிறைய உண்ணவில்லை. தான் பிரியமாய் வளர்த்த குதிரையை அவர் எப்படித் தின்பார்? பிறர் பட்டினியாய் யிருக்க அவர் எங்ஙனம் வயிறு புடைப்பார்? அத்தகைய தியாகக் குணமும் விருந்தோம்பும் தன்மையும் உடையவர் என் கணவர் ஹாத்திம் தாயீ."

(தொடரும்)

## சைதத்துப் படைப்போர்
## வசன காவியம்.

இது ஹஜ்றத் அமீறுல் முஃமினீன் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் குமாரர் அப்துல் றஹ்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அமீர் சுபியான் என்னும் ஒரு அரசனோடு வெகு சாமர்த்தியத்துடன் யுத்தஞ் செய்து அவனுடைய மகளாகிய செய்தத்துவை கலியாணஞ் செய்து மதினத்திற்கு வந்தது முதலிய விஷயங்கள் நிறம்பியுள்ள ஒரு அற்புதமான கிரந்தமாகும். இதை வாசிக்கவும் கேட்கவும் வெகு இன்பகரமா யிருக்கும். இதைப் பற்றி நிரம்பச் சொல்ல வேண்டியதில்லை. இதானது மலையாளம் குஞ்சு மூசாப் புலவர் அவர்களால் செய்துள்ள செயிதத்துப் படைப் போர் என்னும் காவியத்தையே வசன ரூபமாகச் செய்யப் பட்டது.

வசனம் விலை அணா. 12
ஷை பாடல் விலை அணா. 12

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

ஸீரத்துல் குப்ரு வென்னும்

# கதீஜா நாயகி (ரலி)

## ஜீவிய சரித்திரம்.

இச்சரித்திரமானது எஜமானியாக ஏற்று பின்பற்றத்தக்க நாயகியான மஹா சங்கை பொருந்திய நபி பெருமாட்டியின் ஜீவவிருத்தாந்தமாகும். இம்மங்கையர் தமது வடிவாம்சங்களில் உலகப் பெண்கள் எல்லாரினும் மீக்குற்றவர்; அன்றியும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய நம்பிராட்டிகள் எல்லாரினும் பிரதமமானவர் என்ற பெருமை அவருக்கு வாய்ந்திருந்தது. அவரது வாழ்க்கை சம்மந்தமான இந்த சரித்திரம் அனைவரும் படித்து அனுஷ்டிக்கத் தக்கதாயிருக்கிறது.

இதில் கதீஜா நாயகியின் வமிச பாரம்பரையும், முதற் கலியாணங்களும் அவர்களின் வர்த்தகச் செல்வமும், ரஸூல் நாயகம் (ஸல்) ஷாம், மிஸர் தேசங்களுக்கு யாத்திரை போய் வந்ததும், கதீஜா பெருமாட்டிக்கும் நபிகள் பெருமானுருக்கும் திருக்கலியாணம் முடிந்ததும், கதீஜா பெருமாட்டி தமது உரிமையைக் கணவருக்கு அர்பணஞ் செய்ததும், நபி பெருமானுருக்கு வஹி இறங்குதல், நபி பட்டந்தரித்தல், நபிகள் பெருமானுருக்கு கதீஜா பெருமாட்டியின் உதவி, கதீஜா பெருமாட்டியின் மௌத் முதலியவைக ளடங்கி யிருக்கின்றன. இச்சரிதையில் நம் முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கு அளவற்ற போதனைகள் நிறைந்திருக்கின்றன.

கிளேஸ் காகிதம். இதன் விலை ரூ. 1—4—0

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 2—2—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# இரத்தச் சின்னம்

## (தொடர் கதை 8—வது பகுதி)

### 16-வது அத்தியாயம்.

"ஓ! வந்து விட்டாயா? என்ன அழகான டிரஸ். நான் பாங்கில் பார்த்ததைவிட மிக அழகாயிருக்கிறாய்!" என்று சொல்லிக்கொண்டே ஹட்டன் எழுந்து, குலோரியாவின் கைகளை பிடித்தவாறு வீட்டினுள் அழைத்துச் சென்றார். அங்கு முன் அறையில் உட்கார வைத்து, "குலோரியா! ஆஹா என்ன அழகு! நான் உன்னை ரிட்ஸ் ஹோட்டலுக்கு அழைத்து செல்ல வேண்டுமே! நீ சாதாரண உடை அணிந்து வந்தால், அந்த ஹோட்டலில் என்னை எளனம் செய்வார்களே என்று கவலைபட்டேன். ஆனால் தற்போது உனது உடையைப் பார்த்ததும் அக்கவலை பஞ்சாய் பறந்தது. எத்தனையோ பெண்கள் இதைப்போல் சந்தர்ப்பங்களில் என்னை அவமானப்படுத்தியது உனக்கு தெரியாது" என்றும் சொன்னார்.

"அப்படி ஆனால் நீங்கள் அடிக்கடி அழகிய பெண்களை விருந்துக்கு அழைப்பது வழமைபோல் தோன்றுகிறது" என்று குலோரியா சிறிது சிரித்தவாறு கேட்டாள்.

"என்ன குலோரியா இப்படி கேட்கிறாய்! எனக்கென்ன வயதா ஆகிவிட்டது! பெண்கள் கூட்டத்தில் கலந்தால் என்னால் சந்தோஷம் அனுபவிக்க முடியாதா? மற்றவர்கள் எப்படி இருந்தாலும் தற்போது உன் அழகே என் தலையை சுற்ற வைக்கிறதே. நாம் நேராக ரிட்ஸ் ஹோட்டலுக்கு போய் சாப்பிட்டபின் அங்கு இருந்து நாட்டியத்திற்கு போய் சிறிது பார்த்து விட்டு நேராக இங்கே திரும்பி வரலாம்" என்று ஹட்டன் சொன்னார்.

"மறுபடியும் இங்கு திரும்பி வருவதா?" என்று குலோரியா முகத்தில் ஆச்சரியமும் சந்தேகமும் கலந்தவாறு தோன்ற சொன்னாள்.

"நாம் நாட்டியம் பார்த்து வரும் சமயம் எல்லா கடைகளும் மூடப்பட்டு இருக்கும். ஆதலால் இங்கேயே திரும்பி வந்து கொஞ்சம் பழவகைகள் தின்று விட்டுபோகலாம். இரவில் அதிக நேரம் இருப்பதற்கு உனக்கு பயமா?" என்று ஹட்டன் ஒரு சிறு குழந்தைக்கு சொல்லுவதுபோல் சொன்னார்.

"பயம் ஒன்றும் இல்லை"

"பிறகு உன்னை என் காரில் கொண்டு போய் வீட்டில் விடுகிறேன்" என்று சொன்னார்.

"வேண்டாம் நான் எனது காரை கொண்டு வந்து இருக்கிறேன்" என்று குலோரியா சொல்ல ஹட்டன் மிகவும் ஆச்சரியமானார்.

அன்று ஹோட்டலில் குலோரியாவுக்கு மிக சந்தோஷகரமாக நேரம் கழிந்தது. அதுவும் அல்லாமல் அந்த ஹோட்டலில் ஹாலில் ஒரு மூலையில் ஸ்மித் உட்கார்ந்து தங்களை கவனித்து கொண்டு இருந்ததையும் தனது கடைகண்ணால் பார்த்தாள்.

சாப்பாட்டிற்கு பின் நாட்டியத்திற்கு போய் அதையும் பார்த்த பின், காரில் ஏறும்போது, தான் நேராக வீட்டிற்கு போவதாக குலோரியா சொன்னாள். ஆனால் ஹட்டன் அவளை விடுவதாக இல்லை. மிக வற்புறுத்தலின் பேரில் ஹட்டன் வீட்டிற்குச் சென்றாள். இரவு மணி 11½ அடித்தது. ஹட்டன் தன்னிடம் இருந்த சாவியால் தன் வீட்டின் முன் கதவை திறந்து குலோரியாவை உள் அழைத்து சென்றார். இதனால் வீட்டினுள் வேலைக்காரர்கள் யாரும் இல்லை என்பதை குலோரியா அறிந்தாள்.

"இங்கேயே இரு. நான் எல்லா பழவகைகளும் கொண்டு வருகிறேன். இந்த சின்ன வேலைக்காக வேலைக்காரர்களை ஏன் கூப்பிட வேண்டும்" என்று ஹட்டன் சொன்னார்.

"என்னால் தற்போது ஒன்றும் சாப்பிட முடியாது. அதனால் நான் வீட்டிற்கு போய் விடுகிறேன்" என்று சொல்லியவாறு எழுந்தாள்.

"வேண்டாம் வேண்டாம். உன்னிடம் நான் முக்கிய சில சமாசாரங்கள் பேசவேண்டும். மாரீஸை பற்றி" என்று சொல்லிக்கொண்டே அவளின் பின் பக்கமாக வந்து அவளை சேர்த்து அணைக்க முயற்சித்தார். ஆனால் அதை அறிந்த குலோரியா அவர் கைபிடியில் அகப்படாமல் நழுவி சிறிது தூரம் விலகி, நான் வீட்டிற்கு போவதே நல்லதாக தோன்றுகிறது என்று மறுபடியும் சொன்னாள். இதை கேட்டதும் அவருக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. "என்ன! வந்த உடன் இப்படி திரும்பி போய்விட வேண்டுமா? இப்படி வந்து உட்காரு" என்றார். அவளுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் யோசித்தவாறு நின்றாள். பிறகு திடீரென்று திரும்பி வாயர் கதவண்டை ஓடி கதவை திறக்க இழுத்தாள். கதவு பூட்டப்பட்டிருக்கிறது. திரும்பி ஹட்டனை பார்த்து "மிஸ்டர் ஹட்டன் கதவை திறந்து விடுங்கள்" என்று சாந்தமாக சொன்னாள்.

"தற்போது ஏன் திறக்க வேண்டும்! நான் சொல்வதைகேள். இங்கு வந்து உட்காரு" என்று சொன்னார்.

"மிஸ்ட்டர் ஹட்டன்! நீங்கள் எனது குணத்தைப்பற்றி தப்பபிப்பிராயம் கொண்டு இருக்கிறீர்கள். அவ்வாறு ஒன்றும் நினையாமல் தயவுசெய்து கதவை திறங்கள்" என்று தைரியமாக சொன்னாள்.

"அப்படியே" என்று ஹட்டன் சொல்லியவாறு தனது ஜேபியினுள் கையை நுழைத்துக்கொண்டு கதவின் அருகே போனார். திடீரென்று திரும்பி அவளை சேர்த்து அணைத்தார். அவள் பிடியில் அகப்படாமல் இம்முறையும் தப்பித்து, யோசித்தாள். தந்திரத்தால் இவரிடம் இருந்து தப்பிக்க வேண்டும் என்று சிந்தித்தாள்.

"நான் வீட்டிற்கு சிறிது நேரம் சென்றே போகிறேன். தற்போது கொஞ்சம் பழம் சாப்பிடபோகிறேன்" என்று சொல்லியவாறு மேஜையின் அருகே போனாள்.

"இதுதான் நல்ல பிள்ளையின் நடத்தை" என்று சந்தோஷத்துடன் ஹட்டன் சொன்னார். ஆனால் மேஜையின் அருகே போன குலோரியா பழம் ஒன்றும் எடுக்காமல் தனது கைபையை எடுத்தாள். அதனுள் கையைவிட்டு எதையோ தேடினாள். தனது கைக்குட்டையை தேடுகிறாள் என்று ஹட்டன் நினைத்தார். அவள் பையிலிருந்து கையை எடுக்கும்போது கையில் கருப்பாக ஒரு கோழி முட்டை அளவுக்கு ஒரு வஸ்து இருந்தது. அதில் குத்தப்பட்டிருந்த ஒரு சிறிய (குண்டூசி) பின்னை அதிலிருந்து எடுத்து அந்த பின்னை மேஜையின் மேல் வைத்தாள். அந்த வஸ்து ஒரு சிறிய பாம் (வெடிகுண்டு.) அதிலுள்ள பின்னை எடுத்து விட்டால் சிறிது நேரத்திற்குள் அது வெடிக்கும். அது என்னதென்று ஹட்டனுக்கும் தெரியும். அவர் பார்த்ததும் "அடியே என்ன செய்கின்றாய் முட்டாளே! பின்னை அதில் குத்து" என்று அலறினார். அவள் பதில் சாந்தமாக "கவலைப்படாதே, என்னிடம் இன்னும் ஒரு பின் இருக்கிறது. அதை கொண்டு இந்த வெடிகுண்டை மூடி விடுகிறேன். கதவை உடனே திற" என்று அதிகார தோரணையில் சொன்னாள். ஹட்டன் கதவின் அண்டை ஓடிமிக அவசரமாக சாவியை எடுத்து திறந்து விட்டார். அவள் கையில் மேல்படி வஸ்துடன் வீட்டைவிட்டு வெளியே போனதும் கதவைமூடினார்.

அந்த வெடிகுண்டை பார்த்த அதிர்ச்சி அவரை விடவில்லை. நடுக்கத்துடன் மெத்தையில் உள்ள தன்படுக்கை அறைக்குச் சென்றார். மெத்தையில் ஒரு மூலையில் இருட்டில் பதுங்கி கொண்டிருந்த ஸ்மித், ஹட்டன் தன் அறைக்கு போய் கதவை மூடிக்கொண்டதை கவனித்தான். பூட்ஸ் இல்லாமல் வெறுங்காலுடன் ஹட்டன் அறையின் அருகே வந்து நின்று உள்ளே ஏதும் சப்தம் கேட்கிறதா என்று கவனித்தான். ஹட்டன் தனக்குதான் பேசுவதாக சிறிது சப்தம் கேட்டது. உள்ளே விளக்கு எரிவதுமாத்திரம் கதவுக்குமேல் உள்ள காற்றுவாரி ஜன்னல் வழியாக தெரிந்தது.

இவனுக்கு அவ்வறையை பார்க்கவேண்டும் என்று ஆவல் உண்டாயிற்று. அக்கம் பக்கம் சுற்றி பார்த்தான். ஓர் இடத்தில் ஒரு மரமேஜை இருப்பதை பார்த்தான். சப்தமிடாமல் அங்குபோய் அதை எடுத்து வந்து கதவின் அருகே போட்டு அதன்மேல் ஏறி ஜன்னல் வழியாக மெதுவாகப் பார்த்தான். உள்ளே ஹட்டன் ஏதோ கவலையுடன் சிந்தனையில் ஆழ்ந்தவாறு அங்கும் இங்கும் உலாவுவதை கவனித்தான்.

அதே சமயத்தில் கீழே யாரோ நடப்பதாக கால்அடி சப்தம் கேட்டான். உடனே சப்தமிடாமல் மேஜையைவிட்டிறங்கி படிவழியை தாண்டி ஒருமூலையை நாடிசென்றான். அப்படிபோகும் போது படிகட்டின் கீழே இருட்டில் ஒரு மனிதஉருவம் வருவதாக தெரிந்தது. ஆனால் அந்த உருவம் ஆணுபெண்ணு என்று கூட அறிய முடியவில்லை. இருட்டின் மூலையில் மறைந்திருந்து அப்படிகள் வழியாக யார் வருகிறார் என்று கூர்ந்து கவனித்தான். யாரும் வரவில்லை. பிறகு திரும்பி படிகட்டின் அருகே வந்து பார்த்தான். சப்தம் யாதுமில்லை. வீடு பூராவும் மெதுவாக நடந்து சுற்றிப்பார்த்தான்.

புஸ்தகங்கள் அடுக்கியுள்ள அறையில் ஒரு இரும்பு பெட்டியிருந்தது. தான்கொண்டு வந்த பையிலுள்ள ஆயுதங்களின் உதவியால் அதைத் திறந்தான். பிரயோஜனமில்லாமலில்லை. ஆனால் அவன் எதிர்பார்த்த தொகை கிடைக்கவில்லை. உடனே கிடைத்ததை ஒருஜேபியில் போட்டுக்கொண்டு, மறு ஜேபியில், தான்கொண்டுவந்த ஆயுதங்களை கட்டிப் போட்டுக்கொண்டு மறுபடி மெத்தைக்குப் போனான். ஹட்டன் அறையில் விளக்கு இன்னும் எறிந்து கொண்டிருப்பதின் வெளிச்சம் தெரிந்தது. அறையினுள்ளிருந்து யாதும் சப்தம் கேட்கவில்லை. சாவிபோடும் துவாரத்தின் வழியாக பார்த்தான். உள்பக்கத்தில் சாவி, துவாரத்தில் போடப்பட்டிருந்ததால் ஒன்றும் தெரியவில்லை. ஹட்டன் தன்னுடனேயே பணத்தை வைத்திருக்கிறானோ வென்று யோசித்தான். பிறகு அவ்வளவு பெரிய தொகையை தன் வசம் வைத்திருக்கமாட்டான் என்று எண்ணி, மெத்தையை விட்டு, கீழிறங்கி வீட்டின் பின்புறம் வேலைக்காரர்கள் யிருக்குமிடத்திற்கு போய், அங்கு தான் வைத்த தனது பூட்ஸ், கோட் இவைகளை மாட்டிக்கொண்டு, சப்தமில்லாமல் பின் கதவை திறந்து பின்பக்க வெளிமைதானத்தில் வந்தான்.

அச்சமயத்தில் தன் தோளின்மீது யாரோ கை வைத்ததாக தெரிந்து திரும்பினான்.

“ஸ்மித் ! உன்னை தான் தேடுகிறேன். நான் யார் தெரிகிறதா ?” என்று பென்டன் கேட்டார். “இன்ஸ்பெக்டர் பென்டன் !” என்று பெருமூச்சோடு சொன்னான். அடுத்த வினாடியில் அவர் பிடியைத்

தட்டி பாய்ந்து ஓடினன். ஆனல் சிறிது தூரத்தில் இதைக் கவனித்துக் கொண்டிருந்த மூன்று போலீஸ் கான்ஸ்டேபில்களை தப்பிக்க முடியவில்லை. அவர்கள் பிடித்து நேராக போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்றுர்கள்.

இதற்கிடையில், இன்ஸ்பெக்டர் பென்டன் இன்னெரு போலீஸ் அதிகாரியுடன் ஹட்டன் வீட்டினுள் நுழைந்து சுற்றிக் கவனித்தார்கள். யாருமிருப்பதாகத் தோன்றவில்லை. மெத்தையிலுள்ள அறையினுள் விளக்கு வெளிச்சம் தெரியவே, அறையின் கதவை தட்டினர். பதிலில்லை.

"கீழ் போய் வேலைக்காரர்கள் இருக்கிறுர்களா வென்று பார்த்து, யிருந்தால் எழுப்பி கூப்பிட்டு வா" என்று தன்னுடன் வந்தவரிடம் பென்டன் சொன்னர்.

சிறிது நேரத்தில் போனவர் திரும்பி வந்து, வேலைக்காரர்கள் யாரும் வீட்டிலில்லை என்று தெரிவித்தார். பென்டன் அந்த அறையின் முன்னிருந்த மேஜையின் பேரில் ஏறி, காற்று வாரி ஜன்னல் வழியாக உள்நோக்கினர். "யாரோ ஒருவர் அறையினுள் யிருக்கிறுர். தூங்கிக் கொண்டிருக்கிறுர். ஏ! யாரது! எழுந்திரு" என்று சப்த மிட்டார். அறையினுள் படுத்துக் கொண்டிருந்தவர் எழுந்திருக்கவில்லை. அறையின் கதவை வேகமாக தட்டினர்கள். பதிலில்லை.

"கீழே போய் எங்காவது, சுத்தி, கோடாரி, ஏதாவதிருந்தால் எடுத்து வா. எனக்கு சந்தேகமாக யிருக்கிறது" என்றுர்.

இருவரும் கீழிறங்கி தேடி பார்க்க, சுத்தி ஒன்றகப்பட்டது. அதைக் கொண்டு கதவை உடைக்க, பென்டனிடமுள்ள கை டார்ச்சை எறிக்குமாறு சொல்ல, பென்டன் டார்ச்சை ஏற்றி, வெளிச்சத்தை கதவின் மேல் காட்டினர்.

வெள்ளை வர்ணம் பூசப்பட்ட கதவின் நடுவில் றப்பர் ஸ்டாம்பின் உதவியால் ஒரு சிகப்பு வட்டம் குத்தப்பட்டது தெரிந்தது. "கதவை உடை" என்று பதை பதைப்புடன் சொன்னர் பென்டன்.

சுமார் 5-நிமிஷம் அந்த சுத்தியால் கதவில் இடித்து உடைத்தார்கள். இவ்வளவுக்கும் உள்ளே தூங்கும் மனிதன் எழுந்திருக்கவில்லை. கதவில் கொஞ்ச பாகம் உடைந்ததும் துவாரத்தின் வழியாக, பென்டன் கையை விட்டு உள்ளிருந்த சாவியைத் திருப்பி கதவை திறந்தார். உள்ளே விளக்கு எறிந்து கொண்டிருந்தது. படுக்கையில் நிமிர்ந்து ஒரு மனிதன் சிறித்தவாறு கிடந்தான். ஆனல் இறந்து கிடப்பதாகத் தோன்றியது. (தொடரும்.)

# முல்லா தோ பியாஸாவும் அக்பர் பாதுஷாவும்.

(டி. எப். ஆர். மஆலி சாஹிப்)

'முல்லா தோபியாஜா' என்பவர், அக்பர் பாதுஷாவுடைய ஆஸ்தான விதூஷகராக அதாவது தர்பார் விகடனாக இருந்து வந்தார். இதமான விஷயங்களை, தமாஷான முறையில் சொல்லி, மன்னரையும் சபைப் பிரமுகர்களையும் மனம் குதூகலிக்கச் செய்வது அவரது வேலை.

அவர் ஓதிப் படித்தறிந்த ஆலிமாக (அறிஞராக) இருந்ததால் முல்லா என்ற பட்டம் பெற்றிருந்தார். 'தோ பியாஜா' என்றால் 'இரட்டை பங்கு வெங்காயம்' என்று பொருள்படுகிறது. இது வேடிக்கையான பெயர் அல்லவா?

முல்லா தோ பியாஜா மகா புத்திசாலியாகவும், விவேக முடையவராகவும் வரும் பொருள் உணர்பவராகவும் இருந்து வந்தார். ஆயினும் மன்னரையும் பிறரையும் சந்தோஷப் படுத்துவதற்காக கோமாளித் தனமும் புரிந்து வந்தார். எனவே அறிவாற்றலிலும் சரியே, விவேக விசாரணையிலும் சரியே, வாக்கு சாதுர்யத்திலும் சரியே, அக்காலத்தில் அவருக்கு இணையானவர் யாரும் இருக்கவில்லை என்றும் கூறலாம்.

அக்பர் பாதுஷாவும் போதிய அறிவாளியாகவும் விவேக சாலியாகவும் இருந்து வந்தார். ஆதலால் முல்லா தோபியாஜா வுடைய வாக்கிலும் செயலிலும் காணப்படும் சாதுர்யங்களையும் சாமர்த்தியங்களையும் மிகமிக ரசித்து இன்புறுவார்.

நாடாளும் மன்னர்களை யாராவது பரிகாசம் புரிந்து கிண்டல் செய்ய முடியுமா? அப்படிச் செய்பவர்களின் தலை போய்விடு மல்லவா? ஆயினும், முல்லாதோபியாஜா மட்டும் அகிலம் புகழும் அக்பர் பாதுஷாவை பரிகாசம் செய்வார், கிண்டல் பண்ணுவார், முட்டாளாக்குவார். இப்படி யெல்லாம் செய்வதற்கு அக்பர் பாதுஷா, அந்த முல்லாவுக்கு அனுமதி அளித்திருந்தார். கோபமும் ஆத்திரமும் உண்டாகும்படி ஏதேனும் கோமாளித்தன சேஷ்டை செய்து விட்டாலும், உடனே மன்னித்து விடுவார்.

## துரதிருஷ்டசாலி யார்?

ஒரு நாள் அக்பர் பாதுஷாவும் முல்லாதோ பியாஜாவும் பேசிக் கொண்டிருக்கையில், முல்லா சொன்னதாவது :—“மன்னாதி மன்னரே, எங்களைக் காக்கும் ஏந்தலே! உலகிலே மகா அதிருஷ்ட சாலியாகிய என்னைத் தாங்கள் பார்த்திருக்கிறீர்கள். ஆனால், மகா துரதிருஷ்ட சாலியும், காலையில் அவன் முகத்தில் விழித்தால் அன்றெல்லாம் சோறு தண்ணீரே கிடைக்க மாட்டாதே அப்படிப்பட்ட தரித்திர சாலியைத் தாங்கள் பார்த்திருக்கிறீர்களா? அந்த மனிதனை நான் அடிக்கடி பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன், எனக்கொன்றும் நேரிடுவதில்லை” என்பதாகும்.

அதனைக் கேட்டு அக்பர் பாதுஷா ஆச்சரியப் பட்டார். “அப்படிப்பட்ட தரித்திரப் பீடையுடையவனும் உலகில் இருக்கிறானா? அவனை நான் பார்க்க வேண்டும்” என்று சொன்னார்.

அதற்கு முல்லா தோ பியாஸா “அரசே! நான் நாளைக் காலை அவனை இங்கு கொண்டு வந்து நிறுத்துகிறேன், தாங்களே பார்த்து முடிவு செய்யுங்கள்” என்று சொன்னார்.

இப்படிச் சொல்லி விட்டு முல்லாதோபியாஜா போய் விட்டார் தனக்குத் தெரிந்த ஒரு ஏழை மனிதனை அழைத்து “நாளைக்காலை நீ அக்பருக்கு எதிரில் வந்து நிற்க வேண்டும், மன்னர் உன்னைப்பார்க்க வேண்டு மென்று விரும்புகிறார்” என்று சொல்லி ஏற்பாடு செய்து, செலவுக்கு கொஞ்சம் பணமும் கொடுத்தார்.

இந்த ஏற்பாட்டின் படியே, அந்த ஏழை மனிதன், மறு நாள் காலை அரண்மனைக்குப் போய் அக்பர் பாதுஷாவுடைய சயன அறையில் படுக்கைக்குப் பக்கத்தில் நின்று கொண்டான். அதிகாலையில் அக்பர் பாதுஷா கண்விழித் தெழுந்ததும் அந்த துரதிருஷ்டம் பிடித்த மனிதரைப் பார்த்தார்.

அதன் பிறகு உடனே அக்பர் மன்னர் ஓர் அவசரக் காரியமாக, ஓரிடத்துக்குப் போக வேண்டி ஏற்பட்டது. அங்ஙனம் வேற்றிடம் போயிருந்து, மாலையில் தான் திரும்பிவர நேரிட்டது. அப்படி போயிருந்த போது, காலையிலிருந்து மாலை வரை அவருக்கு நல்ல ஆகாரமோ, சௌகர்யமோ கிடைக்காமல் கஷ்டப்பட்டு சஞ்சல முற்றுப் பொழுது போக்கினார்.

இது தெய்வாதீனமாக ஏற்பட்ட சம்பவ மாகும். ஏனெனின் மனிதருக்கு சுகம் வருவதும் போவதும், சஞ்சலம் வருவதும் போவதும், கஷ்டம் நேரிடுவதும் நீங்குவதும் அல்லாவின் உடைய ...க்மத்தினாலும்

187637

விதியினாலும் ஏற்படுவதாகும். அதற்கு எந்த மனிதரும் காரண பூதராக முடியாது. இதை, அப்போது அக்பர் பாதுஷா தெரிந்து கொள்ள வில்லை.

அன்று மாலை மகா கஷ்டத்துடனும் மனச்சோர்வுடனும் அரண்மனைக்குத் திரும்பினார். மகா கோபத்துடன். காலையில் தான் எந்த மனிதருடைய முகத்தில் விழித்தாரோ அந்த மனிதனை வரவழைத்தார். முல்லாவை நோக்கி "ஆம்! இவன் மகா துரதிருஷ்டம் பிடித்த தரித்திரப் பேர்வழிதான். இன்று காலை நான் இவன் முகத்தில் விழித்ததால், இன்றெல்லாம் எனக்கு நல்லுணவும் சௌகர்யமும் கிடைக்கவே இல்லை. இப்படி, பிறருக்கு துர்சகுனத்தையும் துரதிருஷ்டத்தையும் உண்டாக்கும் மனிதன், இந்த உலகத்திலேயே இருக்க லாயக் இல்லாதவன். ஆகையால், இவனை உடனே சிரச்சேதம் செய்து கொன்றுவிடும்படி மரண தண்டனை விதிக்கிறேன்" என்று கடிந்து உத்தரவிட்டார்.

இதைக்கண்டு செவியுற்று நின்று கொண்டிருந்த முல்லாதோபியாஜா, அக்பர் பாதுஷாவை நோக்கி, மிக நயமான மொழிகளால் கூறியதாவது :—

"பிரஜைகளை காக்கும் பாதுஷாவே! இவன் துரதிருஷ்டம் பிடித்த தரித்திரனாக எனக்கொன்றும் தெரியவில்லையே. ஏனெனில், தாங்கள் இவன் முகத்தில் விழித்ததால், நாளெல்லாம் தங்களுக்கு நல்ல உணவும் சௌகர்யமும் மட்டும் கிடைக்கவில்லை என்று குறை சொல்லுகிறீர்கள். இந்த மனிதனும் காலையில் தங்களுடைய முகத்தில் விழித்து தங்களைத்தான் முதல் முதல் பார்த்தான். தங்கள் முகத்தைப் பார்த்த காரணத்தால் இன்று இவன் உயிருக்கே ஆபத்து வந்துவிட்டது. இன்னும் கொஞ்ச நேரத்தில் இவன் தலை வெட்டுண்டு, சாகப் போகிறான். ஆகையால், உங்கள் இரண்டு பேரில் யார் மிகவும் துரதிருஷ்டம் பிடித்த தரித்திரப் பேர்வழி என்று எனக்கொன்றும் புரியவில்லை" என்று சொன்னார்.

முல்லாவின் விவேகமும் வேடிக்கையும் நிறைந்த பேச்சைக் கேட்டு அக்பர் பாதுஷா மனம் மகிழ்ந்தார். கோபமெல்லாம் பறந்துப் போய்விட்டது. உண்மையை உணர்ந்தார். அல்லாஹ்வின் ஆணையின்றி ஓர் அணுவும் அசைவதில்லை என்றுணர்ந்து, அந்த துர்பாக்கிய மனிதரை மன்னித்தார். அவனுக்கு இனாமும் கொடுத்தார். முல்லாதோபியாஸாவையும் தட்டிக் கொடுத்து 'ஷாபாஷ்' என்று சொன்னார்.

# காஜா நிஜாமுத்தீன் ஔலியா அவர்களின் ஜீவிய சரித்திரம்.

(அய்யம்பேட்டை, S. அப்துல் ரஜாக் ஸாஹிப்)

## (4–வது பகுதி)

இத்தருணத்தில், கியாசுத்தீன் பாதுஷாவுக்கு கீழ்ப்பட்ட நம்பிக்கையுள்ள தளகர்த்தரும் 50000 போர் வீரர்களுக்கு அதிபதியாயுமிருந்து வந்தவர் இரகசியமாக படையெடுத்து வந்து மாளிகையில் உள்ள ஆயிரம் கால் மண்டபத்தினுள், ஜாஹர்பேக் என்பவனின் கைபட கியாசுத்தீன் பாதுஷாவையும் அவருடைய விசேஷ ஆலோசகரான காஜா முஹம்மத் பேக் என்பவரையும் வாளுக்கிரையாக்கினர். பாதுஷாவின் குழந்தைகளும் அதே சமயம் கொலை செய்யப்பட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது.

இச்சம்பவம் 1321-வது ஆண்டில் நிகழ்ந்துள்ளது. வெற்றியாளர் நான்கே வருஷம் ஆட்சி செலுத்தி விட்டு காலமானர்.

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் விவரிக்கிமுர்கள்:— நான் ஒரு தடவை என் ஷய்க் அவர்களுடன் படகில் ஏறிச் சென்றேன். படகு ஓடிக்கொண்டிருக்கையிலே ஷய்க் என்னை தம் எதிரில் அழைத்து நீர் டில்லி நகரையடைந்தபின்னர் முஜாஹிதாவில் அதாவது இபாதத் வணக்கத்தில் ஈடுபட்டிருக்க வேண்டுமேயல்லாது நேரத்தை வீண் போக்கலாகாது, முஜாஹிதா ஸ்தானத்தை அடைய வேண்டிய பாதையின் அரைபாகம் நோன்பின் ஆதரவைக் கொண்டது; மீதியான அரைவாசி பாதையை தொழுகை ஹஜ்ஜு இவற்றை கடைபிடித்து கழிக்க வேண்டும். நான் என் தேவைக்குரிய ஒவ்வொன்றையும் ஆண்டவனைக் கேட்டு அடைகிறேன். அப்படியே நீரும் வேண்டிய பொருளை ஆண்டவனை இறைஞ்சிக் கேட்டு பெற வேண்டும். நான் உமக்காக உலக சம்பந்தமான வஸ்துக்களையும் ஆண்டவனிடம் சிறிதளவிற்கு கேட்டுள்ளேன்'' என்ருர்கள்.

ஒரு நாள் ஷய்க் அவர்கள் ஹுஜ்ரா (அறை வீடு) வில் இபாதத் செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் ஸஜ்தா செய்து விட்டு ஸஜ்தாவிலிருந்து தலை தூக்கினதும் என்னை உற்று நோக்கினர்கள். அச்சமயம் நான் அறைக்கு வெளியில் இருந்தேன். ஆனல் அவர்கள் என்னையே உற்று நோக்கினர்கள் என்பதை முன்னிட்டு நான் அவர்கள் அருகில் போய் மரி

யாதை செய்தேன். அப்போது அவர்கள் என்னைப் பார்த்து "உமக்கு இது சமயம் என்ன வேண்டுமோ அதை கேளும்" என்று வினவிய போது நான், என் ஈமானை அழகு படுத்துங்கள் என்று கேட்டேன். "அத்தகைய அழகு உமக்கு அருளாக்கப்பட்டது" என்ற பதிலை ஷய்க் அவர்கள் உடனே பகர்ந்தார்கள்.

ஹஸ்ரத் ஔலியா அவர்கள் பின்னர் ஆயாசத்துடன் சொல்லுவது யாதெனில்:—

"ஷய்க் அவர்கள் என்னை என்ன வேண்டுமெனக் கேட்டபோது, நான் 'ஸமா' என்னும் புகழ் பாடல் உணர்ச்சியின் இன்பத்திலேயே உயிரை விட்டு விடுமாறு தாங்கள் துவாச் செய்யுங்கள் என்று கேட்காமல் போனதற்கு வருந்துகிறேன்"

ஒரு தடவை ஒரு சிலர் ஒன்றுகூடி ஹஸ்ரத் ஔலியாவின் முலாகாத்திற்குச் (தரிசனைக்கு) செல்லவேண்டுமெனத் தீர்மானித்தார்கள்.

ஆனால், வெறுங்கையோடு போகாது அவர்களுக்கு மரியாதை செய்வதன் மூலம் ஏதேனும் பதார்த்தங்களை தங்களுடன் கொண்டுபோக வேண்டும் என்பதற்காக அவரவர்கள் இஷ்டம்போல் கடைகளிலுள்ள பதார்த்தங்களை விலை கொடுத்து வாங்க ஆரம்பித்தனர்.

ஆனால், அக்கோஷ்டியில் வுள்ள ஒருவருக்கு அவர்கள் காணிக்கைமுறை பிடிக்க வில்லை. அதனால் அவர் "சரிதான் நீங்கள் காணிக்கைக்குரிய பதார்த்தங்களை நீங்கள் சேர்ந்தாற்போல் ஔலியா அவர்களுக்கு முன் கொண்டுபோய் வைக்கப்போகிறீர்கள். நீங்கள் சேர்ந்தாற்போல் வைப்பது போலவே, ஹஸ்ரத் ஔலியா உடைய வேலைக்காரர்களும் அவற்றை சேர்ந்தாற்போல் எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள். யார்? யார்? என்னென்ன கொண்டு வந்தார்களென்ற வித்தியாசம் அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது?" என்று சொல்லி தம் சார்பாக கொஞ்சம்போல் தரைமண் எடுத்து அதனை கடுதாசித் துண்டொன்றில் பொட்டலமாகக் கட்டிக் கொண்டு போய் எல்லோருடைய காணிக்கை பதார்த்தங்கள் வைக்கப்பட்டிருந்த விடத்தில் வைத்து விட்டார்.

அக்காணிக்கைகளை ஹஸ்ரத் ஔலியாவின் வேலைக்காரர்கள் அவர்கள் அனுமதியின் பேரில் ஒவ்வொன்றாக எடுத்துச் சேர்த்ததும் அப்பொட்டலத்தையும் எடுக்க கை தொட்ட போது ஹஸ்ரத் ஔலியா அவர்கள் "அதை தொட வேண்டாம், ஏனெனில் அது என் கண்களுக்கு போட வேண்டிய திவ்விய சுர்மா" என்று மொழியவே, அதைக் கொண்டு வந்தவர் மிகவும் வருந்தி தம் குற்றத்திற்கு மன்னிப்புக் கேட்டார்.

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் அந்த விசித்தர காணிக்கை கொண்டு வந்தவர் மீது கோபித்துக் கொள்வதற்கு பதிலாக 'உங்களுக்கு என்னால் ஆக வேண்டியதைச் சொல்லுங்கள்' என்று அன்பாய் மொழிந்தருளினார்கள்.

ஒரு தடவை, ஒருவர் ஹஸ்ரத் ஔலியா அவர்களைக் கண்டு கொள்வதற்காக தம் ஊரிலிருந்து புறப்பட்டார். அவர் வரும் வழியில் 'பூந்தி' என்னும் ஓர் ஊர் இருந்தது. அவ்வூரில் ஷய்க் மோஹன் பெயருடைய மற்றொரு மஹான் விளங்கி வந்தார். அவரையும் தரிசித்து விட்டு போகலாம் என்ற எண்ணத்தின் பேரில் அவர் அம்மஹானிடம் சென்று அவரை தரிசித்தார். தரிசனைக்குப் பின் அந்த மஹான் "நீர் இங்கிருந்து நேரே எங்கே போகிறீர்?" எனக் கேட்டபோது "நான் நேரே ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா மஹபூபே இலாஹி, அவர்களை தரிசிக்க டில்லிக்குப் போகிறேன்" என்று சொன்னார்.

"அப்படியா? ரொம்பவும் நல்ல காரியம், போனவுடன் ஹஸ்ரத் ஔலியா அவர்களுக்கு என் சலாம் சொல்லவும். 'வெள்ளிக்கிழமை இரவுகளில் தங்களை "கஅபா"வில் பார்ப்பார்களாமே, அவர் தங்களுக்கு சலாம் சொல்லச் சொன்னார்' என்று சொன்னால் அவர்கள் என்னை இன்னான் என்று தெரிந்து கொள்வார்கள்" என்று கோரினார். அவ்வாறே, அவர் டில்லிக்கு வந்து ஹஸ்ரத் ஔலியா அவர்களை தரிசித்து முடிந்ததும் ஷய்க் மோஹன் சார்பாக சலாம் சொல்லி அவர்கள் சொன்ன அடையாளத்தையும் விவரித்தார்கள்.

அதைக் கேட்ட ஹஸ்ரத் ஔலியா அவர்கள் "அந்த பகீர் என் அன்பினர் தான். ஆனால் அவர் இரகசியத்தை வெளிப்படுத்தி விடுகிறார்" என்று கூறினார்கள். இந்த சம்பவத்தி லிருந்து ஷய்க் மோஹன் என்பவருடைய மேன்மையும் அவரது பதவியும் கவனிக்கத்தக்கது. இப்பெரியார் ஆகிய ஷய்க் மோஹன் அவர்களுடைய சமாதியும் "பூந்தி" பெயர் கொண்ட ஊரிலேயே அமைந்திருக்கிறது.

சுல்தான் அலாவுத்தீன் (ஷஹாபுத்தீன் குமாரர்) பாதுஷாவின் குணாதிசயங்கள் சிறப்புற்று விளங்கி வந்த உண்மையை உலகத்தினர் பெரும்பாலரும் அறிவர். அவர் தம் விசேஷ சாமார்த்தியத் துறையில் தம்மை இரண்டாவது அலெக்ஸாண்டர் என்றும் கூறி வந்தார். அரசியல் நிபுணத்துவத்தில் மாத்திரமன்றி கல்வி யறிவிலும் மதக் கொள்கையின் கட்டுப்பாட்டிலும் சிறப்புற்றிருந்தார்.

இவர் 22 வருஷ காலம் மிக்க நீதி நெறியுடன் ராஜீய பரிபாலனம் செய்து வந்தவர். இப்படி யிருக்க, ஒரு நாள் இவர் தம் சோதனையின் பொருட்டு ஹஸ்ரத் ஔலியா அவர்கள் சமுகத்திற்கு தம் ராஜ்ய

சம்பந்தமாயுள்ள சில விஷயங்களை எழுதி அதற்கான பதிலை ஒளலியா அவர்களிடமிருந்து வேண்டினார். அதாவது:—

"ஹஸ்ரத் அவர்களே! தாங்கள் உலக மக்களுக் கிடையும் மேன்மை வாய்ந்திருக்கிறீர்கள்.

இகபர தேவைகள் அனைத்தும் தங்கள் அனுக்கிரகத்தால் நிறைவேறுகின்றன. வல்ல இறைவன் உலக ஆட்சியின் சக்தியை எனக்கு அருள் புரிந்துள்ளான். ஆனால் தேசிய அலுவல்களை யாவும் எதை எப்படிச் செய்வது கிரமம் என்பதன் ஆலோசனையைப் பெறுவதற்கு நான் அதனை (பிரச்னையை) அவ்வப்போது தங்கள் சமுகத்தில் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

நான் எப்படிச் செய்தால் என் குடிஜனங்களுக்கு கதி மோக்ஷம் உண்டு என்பதற்கான முறையில் தாங்கள் நான் பிறப்பிக்கும் கட்டளைகளுக்கிடை ஒவ்வொன்றின் கீழ் அதற்குரிய ஹதீது இன்னதெனக் குறித்து எனக்கு அனுப்பி வைப்பீர்களாக"

மேற் சொல்லிய விஷயமடங்கிய விண்ணப்பக் கடிதத்தை எழுதி பாதுஷா, அதை தம் சிறிய குமாரரும் ஹஸ்ரத் ஒளலியா அவர்களின் முரீதுமாகிய கிஸர்கான் கைபட ஹஸ்ரத் ஒளலியா அவர்களுக்கு அனுப்பி வைத்தார். ஹஸ்ரத் அவர்களுடைய பதிலும் கொண்டு வருமாறு கிஸர்கானுக்கு சொல்லப்பட்டது.

விண்ணப்பக் கடிதத்தைக் கொண்டு போன கிஸர்கான் அதை ஹஸ்ரத் ஒளலியா அவர்கள் கையில் கொடுத்தார்.

ஹஸ்ரத் அவர்கள் அதை வாசித்துப் பார்த்தவுடன் அச்சமயம் அங்கு கூடியிருந்தவர்களை நோக்கி "பாத்திஹா ஓதுங்கள்" என மொழிந்தார்கள்.

அடுத்தபடியாக ஹஸ்ரத் ஒளலியா அவர்கள் "பகீர்களுக்கு பாதுஷாக்களுடைய அலுவல்களில் கிஞ்சித்தும் சம்பந்தம் கிடையாது. நானோ ஓர் பகீர், நகரத்தைச் சேர்ந்த ஏதோ ஒரு மூலையில் கிடக்கிறேன். பாதுஷாவுக்காகவும் இதர முஸ்லிம்களுக்காகவும் துஆச் செய்த வண்ணமாக இருந்து வருகிறேன்.

இந்நிலைமையில், பாதுஷா என்னை தம் அலுவல்களில் ஈடு படுமாறு மீண்டும் வற்புறுத்துவாரானால் நான் இனி இங்கு வசிக்க முடியாது. அல்லா உடைய பூமி விஸ்தாரமானது" என்ற சங்கதியை எழுதி அதை கிஸர்கான் வசமாகவே பாதுஷாவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

கிஸர்கான், அக்கடிதத்தை பாதுஷாவுக்கு சேர்ப்பித்த போது அவர் அதை படித்துப் பார்த்து வெகு சந்தோஷப் பட்டார். ஹஸ்ரத்

ஔலியாவுடைய ஆண்டவன் பயபக்தியும் அவர்களது மனத் தூய்மையும் இன்ன தரத்திலுள்ளவை என்ற இரகசியம் அவருக்கு நன்கு விளங்கியது.

அதன் பேரில், பாதுஷா (சுல்தான் அலாவுத்தீன்) மிக்க விசுவாசத்துடன் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் அவர்கள் சந்நிதானத்தை யடைந்து அவரது புனித முலாகத்தினால் (தரிசனையால்) சிறப்புறுவதற்கான நோக்கத்துடன் தாம் வருவதற்குரிய அனுமதி யளிக்குமாறு ஹஸ்ரத் ஔலியா விடத்தில் மற்றொரு தூதர் மூலமாய் வேண்டிக் கொண்டார்.

ஆனால் இச்சமயத்திலும் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் பாதுஷாவுக்கு அனுமதியளிக்க மறுத்து விட்டார்கள்.

"பாதுஷா என்னிடத்திற்கு வர வேண்டிய அவசியமே இல்லை. நானே அவருக்கு மறை முகமாய் இருந்து கொண்டே அவருக்காக துஆச் செய்கிறேன். மறைமுகமாய் செய்யப்படும் துஆவில் தான் அதிக பலன் உண்டு. அன்றியும், என் வீட்டிற்கு முன் வழி ஒன்றும் பின் வழி ஒன்றும் ஆக இரண்டு வழிகள் (வாயல்கள்) உண்டு. என்னை கண்டு கொள்ள பாதுஷா என் வீட்டிற்கு வருவதாக இருந்தால் அவர், ஒரு வாயலின் வழியே வீட்டிற்குள் நுழைந்தார் எனத் தெரிந்ததும் நான் மற்றோர் வாயலின் வழியே ஓடிப் போய் விடுவேன்" என்ற பதில் ஔலியா அவர்கள் சார்பாக பாதுஷாவுக்கு அனுப்பப் பட்டது

பாதுஷாவான கியாசுத்தீன் தக்லக் 1321-வது ஆண்டில் அரசுரிமை பெற்றார். சிறிது காலத்திற்குப்பின் அவர் வங்காளத்தின் மீது படை யெடுத்துச் சென்றார். அவர் தம் பிரயாணத்தின் வழியிலேயே ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களுக்கு "நான் கியாஸ் பூருக்கு வந்து சேருவதற்கு முன்னமேயே நீங்கள் அந்த ஊரை விட்டுச் சென்று விட வேண்டும். ஏனெனில், உங்களிடம் சதா ஜனங்கள் வரப்போக யிருப்பதால் என்னைச் சேர்ந்தவர்களுக்கு இடம் கிடைப்பது திண்டாட்டமாய் விடுகிறது" என்ற கடிதத்தை எழுதி யனுப்பினார்.

ஹஸ்ரத் ஔலியா அவர்களிடம் அக்கடிதம் சேர்ந்த போது அவர்கள் அதை வாசித்துப் பார்த்ததும் "டில்லி இன்னமும் தூரத்திலிருக்கிறது" என்றார்கள். அவர்கள் சொல் வாக்குக் கேற்ப பாதுஷா டில்லிக்குப் போய்ச் சேரவில்லை. முதலில் அவர், தக்லக் ஆபாத் வந்தார். அங்கு அவர் நான்காவது வருஷத்திய வலத்தின் போது கட்டிடத்தின் கீழாக அகப்பட்டு இறந்தார்.

ஒருவர் ஹஸ்ரத் ஔலியா அவர்களிடம் "நான் சொற்பொழிவு ஆற்றும் போது தங்கள் நண்பர்களுள் சிலர் அதை கேட்காமல் சங்கீதத்தை செவியுறுகிறார்கள்" என்று குறை கூறினர்.

அதற்கு ஹஸ்ரத் அவர்கள் "அப்படியாகில், நான் அவர்களை கண்டிப்பேன். ஒரு காரியத்திற்கு இடையூறாக நிற்கும் மற்றொரு காரியத்தை மேற் கொள்ளல் தவறு"

மஷாயக்மார்கள் ஒழுக வேண்டிய ஒழுக்கங்களைப் பற்றி கூறுகையில் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் பின்வரும் நிகழ்ச்சியைப் பற்றியும் குறிப்பிட்டார்கள் :—

அதாவது ஒரு சமயம் ஷய்க் வஹீதுத்தீன் கிர்மானி என்ற பெரியார், ஷய்க் ஷஹாபுத்தீன் நாமமுள்ள மஹானிடத்திற்கு வந்தார்கள். அது சமயம் ஷய்க் ஷஹாபுத்தீன் அவர்கள் தமது தொழுகை விரிப்பையும் சுருட்டி தம் துடையின் கீழ் வைத்தார்கள். தாம் தொழுகாளி என்பதைக் காண்பித்தல் கூடாது என்றெண்ணியே அப்படிச் செய்தார்கள். அது மஷாயக்மார்களுக்கிடை பிறரை கௌரவப் படுத்தத்தக்க செயலாகும்.

நிற்க, ஷய்க் வஹீதுத்தீன் கிர்மானி அவர்கள் 'ஸமா' (புகழ்ப் பாடல் சபை) நடத்த வேண்டுமென ஷஹாபுத்தீன் அவர்களை கேட்டுக் கொண்டார்கள். அவரது வேண்டுகோளுக் கிணங்க புலவர்கள் அழைக்கப்பட்டு ஸமா ஒழுங்கான முறையில் ஆரம்பமாயிற்று. அப்போது ஷஹாபுத்தீன் அவர்கள் ஒதுக்கமானதோர் மூலையில் போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் ஷய்க் ஷஹாபுத்தீனைக் குறித்து "ஸமா" மஜ்லிஸில் எத்தனை அடிப்படையான நல்லம்சங்கள் உண்டோ அவை அனைத்தையும் நான் ஷய்க் ஷஹாபுத்தீனிலேயே இருக்கக் கண்டேன் என்றார்கள். இத்தருணத்தில் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் கண்ணீர் விட்டுச் சொன்னார்கள், "புகழத்தக்க அம்மஹானின் சமீப காலத்திற்கு முன்னரே காலமானார்."

ஒருதடவை ஹஸ்ரத் ஔலியா அவர்களின் ஆசிரமத்தில் 'ஸமா' விசேஷ கொந்தளிப்பான நிலைமையில் நடந்து கொண்டிருக்கும் சமயம் சூபி என்று வழங்கப்பட்டு வந்த மெய்ஞானி ஒருவர், "ஆ" என பெருமூர்ச்சை அடையவே, அவர் சரீரம் குபீர் என எரிந்து சாம்பலாகி விட்டது. (தொடரும்.)

Edited by M. S. Abdul Khudus.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press. Madras.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருமைப் புதல்வியாகிய

# பாத்திமா நாயகி (ரலி)

# ஜீவிய சரித்திரம்.

இச்சரித்திரத்தில் ஹஜ்றத் பாத்திமா நாயகி அவர்களின் மாதாவாகிய உம்முல் மூஃமினீன் கதீஜா நாயகி அவர்களின் வம்ச பரம்பரையும், அவர்களின் பிறப்பும், பாத்திமா நாயகியின் பிறப்பும், பால்யகால அறிவும், பரஸ்பர அன்பும், நாயகியின் திருக்கலியாணமும், அவர் தம் வீட்டில் குடித்தனம் நடத்தி வந்த ஒழுங்கும், தனது பர்த்தாவாகிய அலியாருக்கு இணங்கி நடந்த அழகும், அவர்களின் தயாள சிந்தையும், உழைப்பும், ஆண்டவனின் மீது பக்தியும், வணக்கமும், கபூலாக்கப்பட்ட துஆவும், ரஸூலுல்லாவுக்கு பாத்திமா நாயகியின் பால் இருந்து வந்த அன்பும், நாயகிக்கு தம் தந்தையின்பால் இருந்து வந்த பிரியமும், அவர்களின் ஞாணம், அடக்கம், அச்சம் முதலிய ஒழுக்கங்களும், இமாம் ஹஸன் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் மேம்பாடும், நாயகியின் வபாத்தும் விபரமாய்க் கூறப்பட்டிருப்பதுடன் இந்நாயகியின் ஜீவிய சரித்திரத்தில் நம் சகோதர சகோதரிகளுக்கு அரிய போதனைகளும் அடங்கி யிருக்கின்றன. ஒவ்வொரு முஸ்லிமும் இச்சரிதையை வாசித்துணர வேண்டியது மிக்க அவசியமாகும்.

கிளேஸ் காகிதம். இதன் விலை ரூ. 1—8—0

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 2–14—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# 1955-வது
## வருஷத்தின்

# ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர்

## வெளிவந்து விட்டது.

இதில் இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காதுஸ்ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. இவை சொற்ப காலண்டர்களே அச்சிட்டு வருவதால் ஜனவரி-மீ வருவதற்குள் செலவாகி விடுவது சகஜம். ஆதலால் தங்களுக்கு தேவையுள்ள காலண்டர்களுக்கு உடனே ஆடர் செய்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு காலண்டர் விலை அணா. 10

நூறு காலண்டர் விலை ரூ. 50

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.